# கணியம்

கட்டற்ற மென்பொருள் பற்றிய மாத மின் இதழ்

செப்டம்பர் 30 2013 - இதழ் 21

http://www.kaniyam.com



## எழுதியோர்

ச.குப்பன்
இ. மயூரநாதன்
சங்கர ராமசாமி
தமிழ்
பார்வதிஸ்ரீ
தனசேகர்
நித்தியானந்தன் ஆதவன்
கீரன்

**வடிவமைப்பு:** ஸ்ரீனிவாசன்

**பிழை திருத்தம்:** ஸ்ரீனிவாசன்

**நன்றி:**

ஆமாச்சு - வலை தளம்

**ஊக்கம்:**

இந்திய லினக்ஸ் பயனர் குழு, சென்னை ilugc.in
காஞ்சி லினக்ஸ் பயனர் குழு kanchilug.wordpress.com

## பொருளடக்கம்


தமிழ் விக்கியூடகங்கள்: முன்னோக்கிய நகர்வுக்கான சில எண்ணங்கள் 4

எளிய தமிழில் Wordpress-5 16

OpenFire - குழுவிவாதம் செய்வதற்கான சேவையாளர் 23

தமிழ் விக்கியூடகங்களில் பெண்களின் பங்களிப்பு 26

லினக்ஸ் கட்டளைகள் சில : 34

தமிழ் விக்கியூடகங்களில் மாணவர்கள் 36

தமிழ்விக்கி 10-ஆம் ஆண்டு விழாவில் சென்னையில் மயூரநாதன் ஆற்றிய உரை ! 43

துருவங்கள் - 3 48

ஓபன் சோர்ஸ் தொடர்பான பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் 58

கணியம் வெளியீட்டு விவரம் 61

கணியம் பற்றி... 62

வணக்கம்.

'**கணியம்**' இதழ் மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

செப்டம்பர் 30, 2013 அன்று சென்னையில் தமிழ் விக்கிபீடியாவின் பத்தாண்டுகள் கொண்டாட்ட நிகழ்ச்சியில், "எளிய தமிழில் GNU/Linux பாகம் - 2" வெளியிடப்பட்டது.

http://kaniyam.com/gnu-linux-book-in-tamil-part2 என்ற முகவரியில் இருந்து இந்த நூலை பதிவிறக்கம் செய்யலாம்.

தமிழில் நுட்பங்களை எழுதி, கிரியேட்டிவ் காமன்ஸ் எனும் கட்டற்ற உரிமத்தில் வெளியிடுவதை பாராட்டி,
செல்வா-குமரி அறக்கட்டளையின் பரிசாக, பேராசிரியர் திரு. சி.இரா.செல்வகுமார், பேராசிரியர், வாட்டர்லூ பல்கலைக்கழகம், கனடா அவர்கள் 100 டாலர் (6500 ரூ) அளித்தார். இவர் ஏற்கெனவே, "எளிய தமிழில் MySQL" நூலுக்காக 5000 ரூ நன்கொடை அளித்துள்ளார்.

திரு.சி.இரா.செல்வகுமார் அவர்களுக்கு எமது நன்றிகள்.

கணியம் இதழை தொடர்ந்து வளர்க்கும் அனைத்து அன்பர்களுக்கும் எமது நன்றிகள்.
உங்கள் கருத்துகளையும், பிழை திருத்தங்களையும் editor@kaniyam.com க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்த கணியம் இதழை 'தமிழ் விக்கிபீடியா' சிறப்பிதழாக வெளியிடுகிறோம்.

கணியம் இதழின் படைப்புகள் அனைத்தும், கிரியேடிவ் காமன்ஸ் என்ற உரிமையில் வெளியிடப்படுகின்றன. இதன் மூலம், நீங்கள் ~o~யாருடனும் பகிர்ந்து கொள்ளலாம். ~o~ திருத்தி எழுதி வெளியிடலாம். ~o~ வணிக ரீதியிலும்யன்படுத்தலாம். ஆனால், மூல கட்டுரை, ஆசிரியர் மற்றும் www.kaniyam.com பற்றிய விவரங்களை சேர்த்து தர வேண்டும். இதே உரிமைகளை யாவருக்கும் தர வேண்டும். கிரியேடிவ் காமன்ஸ் என்ற உரிமையில் வெளியிட வேண்டும்.

நன்றி.

ஸ்ரீனி **ஆசிரியர், கணியம்** editor@kaniyam.com

# தமிழ் விக்கியூடகங்கள்: முன்னோக்கிய நகர்வுக்கான சில எண்ணங்கள்

## இ. மயூரநாதன்

விக்கியூடகங்களின் தொலைதூரக் கனவு, "உலக அறிவு முழுமையையும் ஒவ்வொரு மனிதப் பிறவியும் கட்டற்ற முறையில் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு உலகைக் காண்பது" ஆகும். இந்தத் தொலைதூர உலகத்தை அடைவதற்கான சில நடைமுறைச் சாத்தியமான நோக்கங்களையும் செயற்பாடுகளையும் முன்னிறுத்தியே

பன்மொழி விக்கித் திட்டங்கள் இயங்கிவருகின்றன. "கட்டற்ற உரிமங்களின் கீழ் அல்லது பொது உரிமத்தின் கீழ், கல்விசார் உள்ளடக்கங்களைச் சேகரித்தும், உருவாக்கியும் உலக அளவில் பரவச் செய்வதற்கு மக்களுக்கு ஆற்றல் அளித்து ஊக்குவிப்பது" என்பதே இத்திட்டங்களை இயக்கிவரும் விக்கிமீடியா நிறுவனத்தின் செயலிலக்கு.

பல்வேறு விக்கித் திட்டங்களை உருவாக்கி இயக்கிவரும் எல்லா மொழிச் சமூகங்களும் மேற்படி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றன. இந்த நோக்கங்களை அடைவதில், எல்லா மொழிச் சமூகங்களுமே ஒரே மாதிரியான பின்னணிகளையும், வசதி வாய்ப்புக்களையும் கொண்டிருப்பதில்லை. பல்வேறு, வரலாற்று, அரசியல், சமூக பண்பாட்டுக் காரணிகள் இந்த மொழிச் சமூகங்களிடையே ஒரு சமமற்ற தன்மையை உருவாக்கி வைத்துள்ளன. இதனால், மேற்படி இலக்குகளை அடைய விரும்பும் மொழிச் சமூகங்கள் விக்கியூடகங்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும், வளங்களையும் புரிந்துகொண்டு, தமது பின்னணிகளுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமான முறையில் அமைந்த திட்டங்களின் அடிப்படையில் செயல்படுவது முக்கியமானது.

## தமிழ்ச் சமூகப் பின்னணியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

அரசியல், வரலாற்றுக் காரணங்களினால் தமிழ் மொழியானது, கல்வி மொழி, பணியிட மொழி போன்ற தகுதிகளை இழந்தது மட்டுமன்றி, அத்தகுதிகளை மீட்டெடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய ஒரு நிலையிலும் உள்ளது. கல்வித்துறையில் கீழ் மட்டங்களிலும், சில துறைகளில் வரையறுக்கப்பட்ட அளவிலும் தமிழ் மொழிமூலக் கல்வி அறிமுகமானது. எனினும், உயர் கல்வியில், குறிப்பாக அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆங்கிலமே கோலோச்சி வருகிறது.

இந்த நிலைமை தமிழ் மொழிமூல அறிவுப் பரவலை ஊக்குவிக்கும் முயற்சிகளில் பல இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. இவற்றுள்;

1) உயர் அறிவுத்துறைகளில் தமிழ் மொழிமூல உள்ளடக்கங்களுக்கான தேவைக் (Demand) குறைவு,

2) பல துறைகளில் கலைச்சொற்கள் இல்லாமை அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கலைச்சொற்கள் இல்லாமை,

3) துறை வல்லுனர்களுக்குத் தமிழ் மொழியில் எழுதும் திறமையின்மை,

4) பல துறைகளில் தமிழ் மொழியில் உசாத்துணை நூல்கள் கிடையாமை

போன்றவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இக்குறைபாடுகள் ஒன்றையொன்று ஊக்குவித்து வருவதுடன், தமிழ் விக்கியூடகங்களின் வளர்ச்சியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை தமிழில் கல்விசார் உள்ளடக்கங்களுக்கான மூலங்களை வெளியில் தேடவேண்டிய நிலையை உண்டாக்குவதுடன், இவற்றைத் தமிழுக்குக் கொண்டுவருவதில் இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்துகின்றன. கலைச்சொல்லாக்கத்திலும், முறையான அணுகுமுறையோ ஒருங்கிணைப்போ இல்லாதது பெருங்குறையாக உள்ளது. குறிப்பாக, பல்வேறு நாடுகளில் வாழும் தமிழரிடையே கலைச்சொல் ஒருங்கிணைப்பின்மை, பன்னாட்டுப் பயனர்களையும், பங்களிப்பவர்களையும் கொண்ட தமிழ் விக்கியூடகங்களைப் பொறுத்தவரை ஒரு முக்கிய பிரச்சினை எனலாம்.

## தமிழ் விக்கியூடகங்களின் தற்போதைய நடவடிக்கைகளின் தன்மை

தமிழ் விக்கியூடகங்களில் முனைப்பாக இயங்கி வருவன விக்கிப்பீடியா, விக்சனரி, விக்கிச் செய்திகள் ஆகிய திட்டங்களாகும். கடந்த பத்தாண்டுகளில் தமிழ் விக்கியூடகப் பயனர்களின் கவனம் முக்கியமாக மூன்று விடயங்களில் இருந்துள்ளது.

1. கட்டுரை / பக்க எண்ணிக்கை
2. உள்ளடக்கங்களின் தரம்
3. தமிழ் விக்கியூடகச் சமூகத்தின் வளர்ச்சி

தொடக்கநிலைகளில் விக்கித் திட்டங்களில் தாங்குநிலை வளர்ச்சிக்குத் தேவையான மாறுநிலைப் பொருண்மையை (Critical Mass) எட்டுவதற்கு இந்த நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை. பரப்புரைகள், பயிற்சிப் பட்டறைகள், கட்டுரைப் போட்டிகள் போன்ற பல்வேறு திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ்

விக்கியூடகங்கள் பெருமளவுக்குத் தமது நோக்கங்களில் வெற்றி பெற்றுள்ளன எனலாம். தமிழ் விக்கிச் சமூகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் கிடைத்துள்ளன. தமிழ் விக்கியூடகங்களைப் பொறுத்தவரை கடந்த பத்தாண்டுகளில் எட்டப்பட்ட மிகப் பெரிய சாதனை இதுவே எனலாம். விக்கிப்பீடியாவில் தற்போது கட்டுரைகளின் நீளம், உள்ளடக்கத் தரம் என்பவற்றில் கூடுதலான கவனம் திரும்பி உள்ளதையும் காண முடிகிறது.

இனி வரும் ஆண்டுகளிலும் இவை தொடர்பான நடவடிக்கைகளே கூடிய கவனத்துக்கு உள்ளாகும் என்பதிலும் ஐயமில்லை. அதேவேளை, தமிழ் மொழி மூலமான அறிவுப் பரவல் தொடர்பில் மேம்பட்ட முறையில் செயலாற்றுவதற்கு, விக்கியூடகங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதோடு, தொடர்ந்து முன்னோக்கிச் செல்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துச் சிந்திப்பதும் அவசியமானது.

## தமிழ் விக்கியூடகங்களின் உள்ளாற்றல்

2) தமிழ் விக்கியூடகங்கள் மிகப்பெரிய, உலகளாவிய அளவில் அடையாளம் காணப்படுகிற ஒரு அமைப்பின் பகுதி. "விக்கிமீடியா", "விக்கிப்பீடியா" போன்ற மிகப்பரவலாக அறியப்படுகின்ற குறியீடுகள், தமிழ் விக்கித் திட்டங்களையும் மக்கள் உயர்வாகப் பார்ப்பதற்கான அடிப்படையை வழங்குகின்றன.

3) இந்த அமைப்பின் உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப வளம் போன்றவற்றைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய வசதி தமிழ் விக்கியூடகங்களுக்கு உண்டு. மொத்தத்தில், தமிழ் மொழி மூலமான அறிவுப் பரவற் பணிகளைச் செய்வதற்கு உலகத் தரம் வாய்ந்த ஒரு ஊடகம் தமிழ் மக்களுக்குக் வாய்த்துள்ளது.

4) கட்டற்ற உள்ளடக்கம், தன்னார்வக் கூட்டு முயற்சி, யாரும் தொகுக்கலாம் போன்ற விக்கித் திட்டங்களின் அடிப்படைக் கருத்துருக்களும், செயல்முறைகளும் வேறு வகையில் பெற்றுக்கொள்ள முடியாத பல சாத்தியப்பாடுகளைத் தமிழருக்கும் வழங்கியுள்ளன.

5) கல்விசார் உள்ளடக்கங்களின் உருவாக்கம், பரவல், பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகள் இணையவழியில் செயற்றிறன் வாய்ந்த முறையில் இடம்பெறுவதை விக்கியூடக மென்பொருட்கள் உறுதி செய்கின்றன. இதன் மூலம் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிக்கிடக்கும் வல்லமைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுவதற்கான ஆற்றல் வாய்ந்த ஒரு முறைமையைத் தமிழரும் பயன்படுத்தக்கூடிய வசதி தமிழ் விக்கியூடகங்கள் ஊடாகக் கிடைத்துள்ளது.

6) புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களின் அடுத்த தலைமுறையினர் போதிய தமிழ் அறிவைப் பெறுவதற்கும், பண்பாட்டைப் பேணுவதற்கும், வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் தேவையான உள்ளடக்கங்களை இலகுவாக வழங்குவதற்கும், பெற்றுக்கொள்வதற்குமான வாய்ப்பு உண்டு.

7) பல மொழிகளிலும் உள்ள விக்கியூடகத் திட்டங்களில் மிகப்பெரிய அறிவுத் தொகுப்பு ஒரே இடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. கட்டற்ற முறையில் பயன்படுத்தக்கூடிய இந்த வளங்களைத் தமிழுக்குக் கொண்டுவருவதில் எவ்வித தடையும் கிடையாது. தமிழர் தரப்பில் இருந்து சமூக ஆர்வம் கொண்ட மனித வளம் மட்டுமே தேவை.

8) உயர் கல்வித்துறையில், பல்வேறு அறிவுத்துறைகளில், குறிப்பாக அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில், தமிழ் மொழி மூலமான அறிவுத் தேவை மிகக் குறைவாகவே இருப்பதனால், இத்துறைகள் சார்ந்து சந்தைத் தேவையை அடிப்படையாகக் கொண்ட வெளியீடுகள் வருவதோ, அவற்றின் மூலம் புதிய கலைச்சொற்கள் உருவாகும் நிலையோ இல்லை. விக்கியூடகங்களைப் பொறுத்தவரை உள்ளடக்கங்களை உருவாக்குவதில் "சந்தைத் தேவை" என்பது முக்கியமான ஒரு காரணி அல்ல. இதனால், உயர் அறிவுத்துறை சார்ந்த உள்ளடக்கங்களைத் தமிழ் விக்கியூடகங்களில் உருவாக்கும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

9) தமிழில் கல்விசார் அறிவுத்தொகுப்புக்களின் மிகப்பெரிய களஞ்சியமாகத் தமிழ் விக்கியூடகங்கள் உருவாக முடியும். விக்கியூடகங்களின் உள்ளார்ந்த இயல்பு காரணமாகத் தமிழ் மொழி மூலமான கல்விசார் உள்ளடக்க உருவாக்கத்தோடும், பரவலோடும் தொடர்புடைய பல விடயங்களில் தமிழ் விக்கியூடகங்கள் தொடர்ச்சியான இயக்க ஆற்றலாக விளங்க வல்லவை. இதனால் ஒன்றிணைந்த தமிழ் விக்கியூடகத் தளம், தமிழ் மொழிமூல அறிவுப் பரவலில் ஒரு உத்தியோகப்பற்றற்ற நடுவக் களமாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டது.

## உள்ளாற்றலைப் பயன்படுத்திக்கொள்ளல்: ஒரு தொலைநோக்கு

### மிகப்பெரிய அறிவுத்திரட்டு உருவாக்கம்

மேற்சொன்ன விக்கியூடகங்களில் ஆற்றல்களைப் பயன்படுத்தித் தமிழ் மொழியில் உள்ள அறிவுசார் உள்ளடக்கத் திரட்டுகளில் அளவிலும், தரத்திலும் மிகச் சிறந்த திரட்டு என்னும் நிலைக்கு விக்கியூடகங்களை உயர்த்துவது சாத்தியமானதே. இதற்காக உரிய முறையில் திட்டமிட்டுச் செயல்படுதல் அவசியமானது.

### ஒருங்கிணைந்த செயற்பாடுகள்

- இந்த நோக்கத்தை அடைவதில் பல்வேறு விக்கியூடகங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு மிகவும் அவசியமானது. சிறப்பாக விக்கிப்பீடியா, விக்சனரி, விக்கிமூலம், விக்கிநூல்கள், விக்கிச்செய்திகள், பொதுவகம் போன்றவை ஒன்றுக்கொன்று உதவுவனவாகவும், ஒன்றின் குறைகளை மற்றவை இட்டு நிரப்பும் தன்மை உடையனவாகவும் திட்டமிட்டு வளர்த்தெடுக்கவேண்டும்.
- **விக்சனரி** தன்னளவில் ஒரு அகரமுதலியாகச் செயற்படும் அதேவேளை, விக்கிப்பீடியா போன்ற விக்கியூடகத் திட்டங்களில் உள்ளடக்க உருவாக்கத்துக்கான கலைச்சொற்கள் தொடர்பிலான பங்களிப்பையும் செய்துவருவதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.
- அதேபோல இப்போது போதிய வளர்ச்சியடையாத நிலையில் இருக்கும் **விக்கிநூல்**, விக்கிமூலம் ஆகியவை முக்கிய பங்காற்றமுடியும். விக்கிநூல், பள்ளி மட்டத்திலான கல்விசார் உள்ளடக்கத் தேவைகளை நிறைவேற்றுவதில் விக்கிப்பீடியாவுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தக்கதான வழி முறைகளைக் கண்டறிய வேண்டும். **விக்கிமூலத்தில்**, தமிழ் மொழிமூல ஆவணங்களைத் திரட்டுவதன் மூலம், அது தனியானதொரு ஆவணக் காப்பகமாகச் செயல்படுவதுடன், பிற விக்கித் திட்டங்களுக்கான சான்றுகளையும் வழங்கி உதவும்.
- **பொதுவகம்** இலட்சக்கணக்கான படிமங்களையும் பிற ஊடகக் கோப்புக்களையும் கொண்டிருந்த போதும்,

தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் சூழல் போன்றவை தொடர்பான கோப்புக்கள் போதிய அளவில் இல்லை என்றே கூறவேண்டும். அத்துடன், தமிழ் விக்கியூடகங்களில் ஆங்கிலக் குறிப்புக்களுடன் கூடிய நிலப்படங்கள், வரைபடங்கள் போன்றவை பயன்பட்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை மொழி பெயர்த்துப் பொதுவகத்தில் இடவேண்டிய தேவையும் உண்டு.

- இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பதற்கு இணங்க, விக்கிச்செய்திகள் ஒருவகையில் ஒரு ஆவணக் காப்பகமே. காலப்போக்கில் இது பிற விக்கித் திட்டங்களின் உள்ளடக்க உருவாக்கத்திபோது பெறுமதியான சான்றுகளை வழங்கக்கூடும். இதனால், இந்த நோக்கில், விக்கிச் செய்திகளில் இருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செய்திகள் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்படுவதையும், செய்திகளுக்கான நம்பத்தகுந்த சான்றுகள் இருப்பதையும் உறுதிப்படுத்துதல் பயனுள்ளதாக அமையும். இது மட்டுமன்றி நடப்புச் செய்திகளின் விரிவான பின்னணித் தகவல்களுக்காக பிற விக்கித்திட்டங்களுக்கு இணைப்புக்கொடுக்க முடியும் என்பதால், இந்த வகையிலும் ஒருங்கிணைந்து செயல்படுவது பயனுள்ளதாக அமையும்.

## உள்ளடக்க உருவாக்கம்

விக்கியூடகங்களின் செயற்பாடுகளில் அடிப்படையானது உள்ளடக்க உருவாக்கமே. தமிழ் விக்கியூடகங்கள், தொடங்கிய நாளில் இருந்து இதற்கே முக்கியத்துவம் அளித்து வந்துள்ளன. எத்தகைய உள்ளடக்கங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பது குறித்தும் பல பயனர்கள் ஆலமரத்தடி போன்ற பகுதிகளில் அவ்வப்போது கருத்து வெளியிட்டுள்ளார்கள். எனினும், திட்டங்களின் அடிப்படையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். தமிழ் விக்கியூடகங்களில் இருக்கக்கூடிய உள்ளடக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

- <u>பள்ளிமாணவர்களின் பாடத்திட்டம் சார்ந்த உள்ளடக்கங்கள்</u>

தற்போதைய சூழலில், கட்டாயமாகத் தேவைப்படுகின்ற ஒரு உள்ளடக்க வகை இது. எனவே இது தொடர்பில் விக்கியூடகங்கள் கூடிய கவனம் எடுப்பது அவசியம். பல்வேறு பாடத்துறைகள் சார்ந்த இவ்வாறான

உள்ளடக்கங்கள் அச்சு நூல்கள் போன்ற வேறு பல வழிகளிலும் கிடைக்கின்றன. ஆனாலும், பாட நூல்களில் பயன்படுத்த முடியாத, அசைபடங்கள், ஒலிக்கோப்புகள் போன்ற உத்திகளைப் பயன்படுத்தும் வசதிகளும், அதன் மூலம் பாடங்களை இலகுவாகப் புரியவைக்கக் கூடிய வல்லமையும் விக்கியூடகங்களுக்கு உண்டு. விக்கிப்பீடியா, விக்கிநூல், விக்சனரி போன்றவை இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தலாம். மாணவர்களிடையே விக்கியூடகங்களைப் பிரபலப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த வழியாகவும் அமையும். இவர்களிற் பலர் பங்களிக்கும் பயனர்களாக மாறக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

- <u>பொதுவாக எல்லோருக்கும் பயன்படக்கூடிய உள்ளடக்கங்கள்</u>

பொதுவாக மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அல்லது அறிந்துகொள்ள விரும்புகிற விடயங்கள் ஏராளமாக உண்டு, மனித வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட விடயங்கள், பொது அறிவுத் தகவல்கள், நடப்புச் செய்திகள், சமூக நிகழ்வுகள் போன்ற பல இவ்வகைக்குள் அடங்கக்கூடியன. இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதும் தமிழ் விக்கியூடகங்களின் முக்கியமான குறிக்கோளாக இருக்கவேண்டும். இவ்வகை உள்ளடக்கங்களை உருவாக்குவதன் மூலம் தமிழ் விக்கியூடகங்களைப் பரவலான தமிழர் சமூகத்துக்குப் பயன்படத்தக்கவையாக உருவாக்க முடியும். விக்கிப்பீடியா, விக்கிச்செய்தி, விக்கிமேற்கோள் போன்றவை இத்தகைய உள்ளடக்கங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- <u>உயர் அறிவுத்துறைகள் சார்ந்த உள்ளடக்கங்கள்</u>

கல்வி சார்ந்த "சந்தை"யில், அறிவியல், தொழில்நுட்பம் என்பனவும் உள்ளடங்கிய பல்வேறு உயர் அறிவுத்துறைகள் சார்ந்த தமிழ் உள்ளடக்கங்களின் தேவை மிகவும் குறைவு என்று ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டது. ஆனாலும் எல்லா அறிவுத்துறைசார்ந்த விடயங்களையும் தமிழுக்குக் கொண்டுவருவதற்கும், அதற்காகத் தமிழ் மொழியை வளர்த்து எடுப்பதற்கும், இவ்வாறான உள்ளடக்கங்கள் தமிழில் வெளிவரவேண்டியது அவசியம். தற்போதைய சூழலில் இவ்வகை உள்ளடக்க உருவாக்கத்துக்குக் களமாக அமையக்கூடிய ஆற்றல் விக்கியூடகங்களுக்கு உண்டு. குறிப்பாக விக்கிப்பீடியா இதற்கு மிகவும் பொருத்தமானது. அத்துடன், ஆய்வுத் தேவைகளுக்குப் பயன்படக்கூடிய உள்ளடக்கங்களை விக்கி மூலத்தில்

சேகரிக்க முடியும். இது பல துறைகளையும் சேர்ந்த ஆய்வாளர்களுக்குப் பெரும் உதவியாக அமையக்கூடியது.

## கட்டற்ற மூல ஆவணச் சேகரிப்பு

விக்கிமூலம் பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கும் அப்பால் விரிவடைய வேண்டிய தேவை உள்ளது. தற்போதைய நிலையில் இதற்கான மனிதவலு போதாது என்பது உண்மையே. ஆனாலும், இதற்கான சில திட்டங்கள் குறித்துச் சிந்திப்பதன் மூலம் புதிய எண்ணங்கள் உருவாகக்கூடும் என்பதையும், இவ்விடயத்தில் குறிப்பான அக்கறை கொண்ட புதிய பயனர்களை ஈர்க்கக்கூடும் என்பதையும் கவனத்தில் கொள்வது பொருந்தும். பல்வேறு அமைப்புக்களிடம் இருக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைகள், பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், செய்திகள், நினைவு வெளியீடுகள், நூல்கள், பிற வெளியீடுகள் போன்றவற்றைக் கட்டற்ற முறையில் வெளியிட ஊக்குவிப்பதன் மூலம் தமிழ் விக்கிமூலத்துக்கான உள்ளடக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். சில பிற மொழி விக்கிநூல்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

தற்காலத்தில், பல்வேறு அருங்காட்சியகங்களில் காட்சியில் உள்ள அரும்பொருட்களை ஒளிப்படம் எடுத்து வெளியிட அனுமதி வழங்குகின்றனர். இத்தகையவற்றை இனங்கண்டு, இவற்றைப் படம் எடுத்துப் பொதுவகத்தில் பதிவேற்றுவதை ஒரு திட்டமாகவே செயல்படுத்த முடியும். தவிரவும், தற்போது காப்புரிமைக் காலம் கடந்துவிட்ட பல நூல்களில் பல பயனுள்ள வரைபடங்கள், ஒளிப்படங்கள், நிலப்படங்கள் போன்றவை உள்ளன. இவற்றை உரிய வடிவில் எண்ணிமப் படிகளாக்கிப் பொதுவகத்தில் இடமுடியும்.

## பிற மொழி உள்ளடக்கங்களை மொழிபெயர்த்தல்

பிறமொழி விக்கியூடகங்களில், குறிப்பாக ஆங்கிலத்தில் உள்ள தரம்வாய்ந்த ஏராளமான உள்ளடக்கங்களைத் தமிழுக்குக் கொண்டுவருவதிலும் கவனம் செலுத்தவேண்டும். பெறுபேறுகள் தரமானவையாக இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளும் தேவை. ஒரு முழுமையான மொழிபெயர்ப்புக் கையேடு ஒன்று இருப்பது

மிகவும் அவசியம். ஆர்வமுள்ள பயனர்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு பயிற்சியளிப்பது குறித்தும் சிந்திக்கலாம். மொழிபெயர்ப்புகளை வேகமாகச் செய்வதற்குத் தானியங்கித் தொழில் நுட்பங்களை அளவாகவும், பொருத்தமான முறையிலும் பயன்படுத்துவது குறித்த வழிமுறைகளைக் கண்டறிவதும் பயனுள்ளதாக அமையும்.

### வலையமைப்பு உருவாக்கம்

தமிழ் விக்கியூடகங்கள் தொடர்பில் முன்னெடுக்கக்கூடிய பல திட்டங்களில் உதவக்கூடிய அல்லது ஒன்றிணைந்து செயற்படக்கூடிய பிற அமைப்புக்களுடன் தொடர்புகளை உருவாக்கிப் பேணுவது பயன் தரக்கூடிய ஒரு முயற்சி. இவ்வாறான தொடர்புகள் பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அமையக்கூடும்.

- இரு தரப்புக்கும் பொதுவான நோக்கங்கள்
- ஒவ்வொரு தரப்பும் மற்றத்தரப்பில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள்
- சமூக மேம்பாட்டை ஆதரிக்கும் ஆர்வம்

இந்த அடிப்படைகளில், அமைப்புக்களையும், தனிப்பட்டவர்களையும் இனங்கண்டு பயனுள்ள தொடர்புகளை உருவாக்கிக் கொள்வது முக்கியமானது.

### பொதுவான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகள்

தமிழ் விக்கியூடகங்களின் நோக்கங்களில் அடங்கும் தமிழ் மொழி மூலமான அறிவுத்திரட்டல் அவற்றைப் பரவச் செய்தல் ஆகிய நோக்கங்களைப் பகிர்ந்து கொள்ளுகின்ற நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஆவணக் காப்பகங்கள் போன்றவை தமிழ் விக்கியூடகங்களின் மேம்பாட்டுக்காக, உசாத்துணை வசதிகள், கட்டற்ற உள்ளடக்கங்கள், பயிற்சி போன்றவற்றை அளித்து உதவ முடியும். அத்தோடு இவ்வாறான நிறுவனங்கள் பல கேட்போர் கூடம் போன்ற வசதிகளைக் கொண்டுள்ளன. முறையாகத் தொடர்புகளை வளர்த்து எடுத்தால் இவ்வாறான வசதிகளைத் தமிழ் விக்கியூடகங்களின் தேவைகளுக்குப் பெறுவதும் சாத்தியமாகலாம் என்பதோடு, கூட்டாக நிகழ்வுகளை ஒழுங்கு செய்யக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு. சில வகை ஊடகங்களும்

விக்கியூடகங்களுடன் பொது நோக்கங்களைக் கொண்டவை இவற்றுடனான தொடர்புகள் மூலம், உள்ளடக்க உதவிகள், பரப்புரை வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### பரஸ்பர பயன்களை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகள்

தமிழ் விக்கியூடகங்களின் நோக்கங்களை அடைவதில் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், பிற கல்விசார் அமைப்புக்கள், போன்றவை மிகவும் முக்கியமானவை. முதலாவதாகத் தமிழ் மொழி மூலமான முறைசார்ந்த அறிவுத் தேவை இத்தகைய அமைப்புக்கள் மூலமாகவே உருவாகின்றன. எனவே இத்தகைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வமைப்புக்களின் ஆலோசனைகளும், உதவிகளும் தமிழ் விக்கியூடகங்களுக்கு அவசியமானவை. இது தவிர, இவ்வமைப்புக்களில் பயிலும் மாணவர்கள் மத்தியில் உருவாகக்கூடிய, தமிழ் விக்கியூடகங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வு எதிர்காலத்தில் நூற்றுக்கணக்கான பங்களிக்கும் பயனர் உருவாக்கத்துக்கு உதவும். இந்த வகையில் மேற்படி அமைப்புக்கள் பெருமளவு பங்காற்ற முடியும். இவற்றோடு, உசாத்துணைத் தேவைகள், கலைச்சொல் தேவைகள், உள்ளடக்கத் தேவைகள், உள்ளடக்கங்களின் தரம் பேணுவதை உறுதி செய்தல், அவற்றின் நம்பகத்தன்மையைக் கூட்டுதல், பயனர்களுக்கான பயிற்சி வழங்கல் போன்ற விடயங்களிலும் மேற்படி அமைப்புக்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை, தமிழ் விக்கியூடகங்கள் இந்த அமைப்புக்களின் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேவையான கட்டற்ற உள்ளடக்கங்களை உருவாக்குவதில் முனைப்புக்காட்ட வேண்டும்.

மேற்படி அமைப்புக்களோடு பல்வேறு வகையான ஊடகங்களும் ஒருதரப்பிலிருந்து மறு தரப்புப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளின் அடிப்படையில் ஒத்துழைக்க முடியும். ஊடகங்களின் பல்வேறு தேவைகளுக்கு விக்கியூடகங்களின் கட்டற்ற உள்ளடக்கங்கள் பயனுள்ளவையாக அமைகின்றன. அதேவேளை, இணையத்துக்கு வெளியே விக்கியூடகங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் முக்கிய பங்காற்ற முடியும்.

## சமூக மேம்பாட்டு ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகள்

குறிப்பாக எவ்வித நேரடிப் பயன்கள் இல்லாதபோதும், பொதுவான தமிழர் சமூக மேம்பாட்டு ஆர்வம் காரணமாகத் தமிழ் விக்கியூடகங்களோடு ஒத்துழைக்கக்கூடிய பல்வேறு அமைப்புக்கள் உள்ளன, தனிப்பட்டவர்களும் உள்ளனர். மேற்படி அமைப்புக்களுடனும், தனிப்பட்டோருடனும் தொடர்புகளைப் பேணிக்கொண்டு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வளங்களைத் தமிழ் விக்கியூடகங்களின் மேம்பாட்டுக்காகத் திறமையாகப் பயன்படுத்திக்கொள்வதும் அவசியம்.

## நிறைவுரை

தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்ற தகவல் தொழில்நுட்பமும், திறந்த மூல மென்பொருள் உருவாக்கம், கட்டற்ற அறிவு வள உருவாக்கம், நல்லெண்ணத்துடன் கூடிய தன்னார்வக் கூட்டு முயற்சி போன்ற கருத்துருக்களும் சேர்ந்து உருவான விக்கியூடகங்கள், தமிழ்ச் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்குக் கிடைத்துள்ள மிகவும் பெறுமதியான வளம். தமிழ் மூலமான அறிவுப்பரவல் தொடர்பில் இதுவரை இயலாது என்று கருதப்பட்ட பலவற்றை நிகழ்த்திக் காட்டக்கூடிய வாய்ப்புத் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது. இதற்கான ஆற்றலை விக்கியூடகங்கள் வழமையாக நடைபெறுவதுபோல் அரசுக்கோ, மிகப்பெரிய அமைப்புக்களுக்கோ வழங்கவில்லை. வயது, கல்வித்தகைமை, மதம், நாட்டினம், பொருளாதாரப் பின்னணி, உறுப்பினராகச் சேர்தல் என்று எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நேரடியாகவே இந்த ஆற்றலும், பொறுப்பும் தரப்பட்டுள்ளன. பொதுவாகத் தமிழர் மேம்பாட்டிலும், குறிப்பாகத் தமிழ் மொழி மூலமான அறிவுப் பரவலிலும் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் தமிழ் விக்கியூடகங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அதைத் திட்டமிட்டுத் திறமையாகப் பயன்படுத்திக்கொள்வதன் மூலமே ஆகக்கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கட்டுரையாளர்: இ.மயூரநாதன்**

இ.மயூரநாதன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர். கட்டடக்கலைத் துறையில் முதுநிலைப் பட்டம் பெற்று, ஐக்கிய அரபு அமீரகத்தில் பணியாற்றி வருகிறார். 2003 ல் தமிழ் விக்கிப்பீடியா தொடங்கியது முதல் கிட்டத்தட்ட ஓராண்டுக்கும் மேலாக தனியொருவராகப் பங்களித்து இத்திட்டத்துக்கு வித்திட்டவர் மயூரநாதனே.



அன்று முதல் கட்டிடக்கலை, வரலாறு, மொழியியல் ஆகிய பல்வேறு ஆர்வத் துறைகளில் 3000 க்கும் கூடுதலான கட்டுரைகளைத் தொடங்கியுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகளில் கட்டிடக்கலை, யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ், முடிச்சு, ஓவியத்தின் வரலாறு, கோயில், யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. தமிழ் விக்சனரி, தமிழ் விக்கி மேற்கோள் திட்டங்களின் தொடக்கக் காலத்தில் பங்களித்துள்ள இவர், மீடியாவிக்கி மென்பொருளின் தமிழ் இடைமுக மொழிபெயர்ப்பு உட்பட பல்வேறு வகையான விக்கிப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

# எளிய தமிழில் Wordpress-5

**தமிழ்** iamthamizh@gmail.com

### பக்கங்கள்

உங்கள் தளத்தின் (பதிவுகள் அல்லாத) தனிப்பட்ட பக்கங்களை பார்வையிட, சேர்க்க, மாற்றியமைக்க, நீக்க இந்த மெனு உதவும்.

இந்த மெனுவில்


பக்கங்களைச் சுருக்கமாக நிரந்தரமான பதிவுகள் எனலாம். அதிலும் Content உங்கள் விருப்பம். அது என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உதாரணமாக உங்களைப் பற்றிய அறிமுகத்தை (About me) அதில் தரலாம். அந்த Content எப்படி தளத்தில் உள்ளிடப்பட வேண்டும் என்பதை இங்கே சற்று விரிவாகப் பார்க்கலாம்.

உங்கள் Dashboard-ல் Pages எனும் இணைப்பைக் கிளிக்கினால் படத்தில் காட்டப்பட்டுள்ளது போல ஒரு Window வரும்.

உங்கள் பக்கங்களை திருத்திய வரிசைப்படி காட்டும் பகுதியே இது. இதில் பக்கத்தின் தலைப்பு (Title), எழுதியவர் (Author), பதிவில் இடம்பெற்ற மறுமொழிகளின் எண்ணிக்கை (No. of comments), பதிவின் தற்போதைய நிலை (Status), திருத்தியமைக்கப்பட்ட தேதி (Date) ஆகியவை அட்டவணை வடிவில் கொடுக்கப்பட்டிருக்கும்.

அட்டவணை வடிவில் அமைந்த பட்டியலில் ஒவ்வொரு பதிவின் கீழும் கீழ்கண்ட தேர்வுகள் (Options) இருக்கும். அது குறித்து விரிவாக...

ஏற்கனவே இவற்றை நாம் பதிவுகளிலும் கண்டுள்ளோம் என்பது நினைவிருக்கிறதா? அதே செயல்முறைகள்தான் இங்கேயும். ஒரு சிறு நினைவூட்டலாக எடுத்துக் கொள்ளுங்கள்




**தொகு (Edit)** : முழுமையாக (அல்லது வசதியாக) தொகுக்க உதவும் தேர்வு இது

**விரைவாக தொகு (Quick edit)** : சில குறிப்பிட்ட விடயங்களை மட்டும் (Date, Title, Author, etc ) தொகுக்க

உதவும் தேர்வு இது.

**குப்பை (Trash)** : வழக்கமாகப் பயன்படுத்தும் நீக்குதலுக்கான (Delete) தேர்வு இது. (முழுப் பக்கத்தையுமே நீக்கிவிட முடியும்!)

**பார் (view)** : மாற்றங்கள் முடிந்த பின்னரோ, பதிவிடும் முன்னரோ, பதிவிட்ட பின்னரோ பக்கத்தைப் (Preview) பார்வையிட உதவும் தேர்வு இது.

**முக்கியமான குறிப்பு:**


ü பக்கங்களில் பதிவுகளைப் போல Tags, Categories இடம்பெறாது என்பதை நினைவில் கொள்க.

**புதிய பதிவிட:**

Add new post என்ற தேர்வினை Posts-மெனுவில் தேர்ந்தெடுப்பதன் மூலமாக நாம் புதிய பதிவினை வெளியிடலாம். இந்த இணைப்பில் நாம் எழுதுவதற்கு ஓர் வெற்றிடம் தரப்படும். அதில் எளிதாக நம்முடைய கருத்துக்களை எழுதலாம். நமக்கு விருப்பமான எதையும் எழுதலாம். அவற்றை முறையாக வகைப்படுத்தினால், தேடுபொறிகளில் எளிதில் அகப்படும். அதாவது உங்கள் கருத்துக்களின் உள்ளடக்கத்தை வகைப்பிரிக்க (Categories) வேண்டும். அதோடு வகைச்சொற்களையும் (Tags) இட வேண்டும்.

**உதாரணத்திற்கு**,

நீங்கள் கணியம் என்ற தலைப்பில் பதிவெழுதினால், அதை மின்னிதழ்கள், மாத இதழ்கள் என வகைப்படுத்தலாம். கணியம், மற்றும் பதிவின் முக்கியச் சொற்களை வகைச்சொற்களாகத் தரலாம்.




## புதிய பக்கம் (**Add new Page**):

Add new page என்ற தேர்வினை Pages-மெனுவில் தேர்ந்தெடுப்பதன் மூலமாக நாம் புதிய பதிவினை வெளியிடலாம். இந்த இணைப்பில் நாம் எழுதுவதற்கு ஓர் வெற்றிடம் தரப்படும். அதில் எளிதாக நம்முடைய கருத்துக்களை எழுதலாம். நமக்கு விருப்பமான எதையும் எழுதலாம். அவற்றை வகைப்படுத்த வேண்டியதில்லை. நிரந்தரமான எந்த பதிவையும் பக்கமாக்கலாம். அடிக்கடி பயன்படுத்தப்படும் பக்கம் "ஆசிரியர் குறிப்பு" (About

Author) ஆகும்.

பதிவோ, பக்கமோ, அவற்றை Draft ஆக சேமித்து எப்போது வேண்டுமானாலும் வெளியிடலாம் என்பதையும் மறவாதீர்.

## பதிவெழுத கூடுதல் வசதிகள்:

வெறுமனே எழுதினால் நமக்கே சலிப்பு தட்டக்கூடும். அதை வண்ணமயமாக, வித்தியாசப்படுத்திக் காட்டினால், படிப்பவருக்கும் உவப்பு ஏற்படும் உற்சாகம் தொற்றிக்கொள்ளும்.

Wordpress-ல் நமக்கு அதற்கான அனைத்து விதமான வசதிகளும் கிடைக்கின்றன. பொதுவாக MS-Word –ல் நாம் பயன்படுத்தும் பெரும்பாலான வசதிகளை இங்கேயும் பயன்படுத்த முடியும். அவற்றைப் பற்றி சுருக்கமாக இங்கே…

**Bold**, *Italic*, Underline உள்ளிட்ட எளிய வசதிகள் முதற்கொண்டு, எழுத்தின் அளவு, நிறம், மேற்கோள்கள் (Blackquotes), பத்தி இசைவுகள் (Paragraph alignments), வரிசை முறைகள் (Bullet, Ordered List), உள்பட பல வசதிகளும் உள்ளன.

பொதுவாக பதிவெழுதும் பகுதி இருவேறு விதமான பகுதிகளாக இருக்கும். அவை,

Ø Visual

Ø Text

· Visual என்பது சாதாரணமாக நாம் எழுதும் பகுதி.

· Text என்பது கூடுதலாக HTML மொழியை எழுத வாய்ப்பளிக்கும் பகுதி. இதில் embed கூட செய்ய இயலும். இப்பகுதியில் முழுக்கவே HTML –ஐ பயன்படுத்தி பதிவெழுதலாம். **HTML பரிச்சயமுள்ளவர்கள் மட்டும் முயன்று**

**பார்க்கலாம்.**

இதுதவிர கூடுதலாக படங்கள் (Images), காணொளிகள் (Videos) முதலானவற்றையும் இணைக்கும் வசதியும் உண்டு. அதற்கு **Add Media** என்கிற வசதியை உபயோகப்படுத்தலாம். வீடியோ-வை உள்ளிட நாம் Premium user ஆக வேண்டும் மற்றபடி pdf-ஐக் கூட நாம் சாதாரணமாக உள்ளிடலாம்.

Ø நமக்கு 3 GB கொள்ளளவு கொடுக்கப்பட்டிருக்கும்.

Ø அதில் ஒரே முறையில் 1GB அளவு கோப்புகளை உள்ளிடலாம்.

# OpenFire - குழுவிவாதம் செய்வதற்கான சேவையாளர்

தற்போது உலகில் எங்குஉள்ளவரும் தாம் விரும்பும் வேறுஎவருடனும் எந்தநேரத்திலும் உடனடியாக தொடர்புகொண்டு இணையத்தின் வாயிலாக செய்திகளை பரிமாறி கொள்ளமுடியும் என்ற இன்றைய நிலையில் அவர்களுக்குள் குழுவிவாதம் செய்வதும் மிகஎளிதான செயலாக ஆகிவிட்டது .இருப்பினும் இந்த குழுவிவாதத்திற்கான சேவையாளரை கட்டணம் செலுத்திதான் பெறமுடியும் என்பதற்கு பதிலாக கட்டணம் இல்லாத திறமூல அடிப்படையில் செயல்படக்கூடிய விண்டோ,லினக்ஸ், மேக் போன்ற அனைத்து இயக்க முறைமைகளிலும் செயல்படுக்கூடிய அப்பாச்சி உரிமம் பெற்ற XMPP என்ற நெறிமுறையை பின்பற்றி செயல்படக்கூடிய ஓப்பன் ஃபயர் எனும் பயன்பாட்டின் உதவியுடன் இணையத்தின் வாயிலாக செயல்படும் நம்முடைய சொந்த குழுவிவாத சேவையாளரை நாமே நிறுவிகொள்ள முடியும் இதற்காக குறைந்த பட்சம் இரண்டு கணினிகளும் Openfire எனும் பயன்பாட்டு மென்பொருள், இணைய இணைப்பு ஆகியவைமட்டுமே தேவையானவையாகும்

இதற்காக http://www.igniterealtime.org/projects/openfire/ என்ற இணையமுகவரியில் செயல்படும் ignite realtime என்ற இணைய தளத்திலிருந்து எந்த இயக்கமுறைமையில் செயல்படவேண்டுமோ அதற்கேற்ற Openfire 3.8.2 என்றவாறு சமீபத்திய பதிப்பு கோப்பினை பதிவிறக்கம் செய்து கொள்க

பிறகு இதனுடைய செயல் கோப்பினை தெரிவுசெய்து சொடுக்கி நம்முடைய கணினியில் இந்த பயன்பாட்டினை நிறுவிகொள்க . அதன்பின் 127.0.0.1.9090 என்ற முகவரியை நம்முடைய உலாவியின் மூலம் தேடிபிடித்து திறந்துகொள்க பின்னர் அதில் கூறுவதை போன்று இந்த ஓப்பன்ஃபயரை கட்டமைவு செய்துகொள்க.

இவ்வாறுஇந்த ஓப்பன்ஃபயரை கட்டமைவு செய்யும் மூன்றாவது படிமுறையின்போது தரவுதள அடிப்படையை கட்டமைவுசெய்திடுமாறு நம்மிடம் கோரும். உடன் இதற்காக உள்பொதிந்த HDWLDB என்ற தரவுதளத்தினை

பயன்படுத்தி கொள்க

இவ்வாறுஇந்த ஓப்பன்ஃபயரை கட்டமைவு செய்துமுடித்தபின் கணினியின் நிருவாகியாக அதற்கான நிருவாகியின்  பெயர் ,கடவுச்சொற்களின் வாயிலாக உள்நுழைவுசெய்திடுக.

இந்நிலையில் குழுவிவாதம் செய்வதற்காக ஒருசிலபயனாளர்களை உருவாக்கி இதில் சேர்க்கவேண்டும் அதற்காக Users=>Groups=>crate a New User=>  என்றவாறு கட்டளைகளை செயற்படுத்துக.

பின்னர் தோன்றிடும் திரையில் பயனாளரின்  பெயர்  இதரவிவரங்களை உள்ளீடு செய்திடுக . இவ்வாறே இந்த பயனாளரின் குழு, அரட்டை அடிப்பதற்கான அறை ஆகியவற்றையும் உருவாக்கிடுக.

இதுபோன்றே மற்றொரு பயனாளரின் பெயர்  இதரவிவரங்களுடன் மற்ற  பயனாளரின் குழு, குழுவிவாத செய்வதற்கான அறை ஆகியவற்றையும் உருவாக்கி கொள்க.

இதனோடு நம்முடைய பயனாளருடன் குழுவிவாதம் செய்வதற்கான  வாடிக்கையாளரை உருவாக்கிட வேண்டும் அதற்காக [http://www.igniterealtime.org/downloads/index.jsp](http://www.igniterealtime.org/downloads/index.jsp)  என்ற தளத்திலிருந்து spark என்ற விண்டோ,லினக்ஸ், மேக்  போன்ற அனைத்து இயக்கமுறைமைகளிலும் செயல்படக்கூடிய நேரடியாக தொடர்புகொள்ளும் வாடிக்கையாளரை  பதிவிறக்கம் செய்துகொள்க

அதன்பின்னர் நம்முடைய கணினியில்  இதனை நிறுவிகொண்டு கணினியின் நிருவாகியாக அதற்கான நிருவாகியின்  பெயர் கடவுச் சொற்கள் ஆகியவற்றை உள்ளீடு செய்வதன் வாயிலாகஇதில் உள்நுழைவுசெய்திடுக

நாம் இப்போது குழுவிவாதம் செய்வதற்கும் உடனடி செய்தியை அனுப்புவதற்கும் தயாராக உள்ளோம்  அதனால் தற்போது இதற்கான தொடர்பாளரை இதில் சேர்க்கவேண்டும் அதற்காக Contacts=>Add Contact=> என்றவாறு கட்டளைகளை தெரிவுசெய்து சொடுக்குக.

பிறகு Actions=> Start a chat => என்றவாறு கட்டளைகளை தெரிவுசெய்து சொடுக்கி நம்முடைய குழுவிவாதத்தை ஆரம்பித்திடுக.

மேலும் Plugins=> Available plugins=> என்றவாறு கட்டளைகளை தெரிவுசெய்து சொடுக்கி இதில் கூடுதலான வசதிகளையும் சேர்த்து கொள்க.

பொதுவாக எந்தவொருபயனாளரும் இதில் குழுவிவாதம் ஆரம்பிப்பிப்பதற்காக உள்நுழைவு செய்வதற்குமுன் தன்னைபற்றிய செய்தியை MotD என்ற வசதிமூலம் திரையில் பிரதிபலிக்க செய்யவேண்டும் அதற்காக Users/Groups=>MotD Properties=> என்றவாறு கட்டளைகளை தெரிவுசெய்து சொடுக்கி கட்டமைவுசெய்துகொள்க . பின்னர் குழுவிவாதத்தை தொடங்கி நடத்திட ஒருங்கிணைப்பு செய்தல், நிருவகித்தல் பிரித்தல் போன்ற நம்முடைய தேவைக்கேற்ற செயல்களை அனுமதிக்கும் Asterisk என்ற கூடுதல் வதியையும் நிறுவிகொள்க .



# தமிழ் விக்கியூடகங்களில் பெண்களின் பங்களிப்பு

## பார்வதிஸ்ரீ

**கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து**.

https://ta.wikipedia.org/s/38gk

எல்லா மொழி விக்கிப்பீடியாக்களையும் நாளாந்தம் 500 மில்லியன் பயனர்கள் பயன்படுதுகிறார்கள். அண்ணளவாக 200 000 பயனர்கள் தொகுக்கிறார்கள். ஆனால் விக்கிப்பீடியர்களில் 13% ஆனவர்களே பெண்கள்.[1] இதில் தமிழ் விக்கிப்பீடியாவில் தொடர்ச்சியாகத் தொகுப்பவர்களில் 1% பயனர்கள் மட்டுமே பெண்கள். இந்த நிலை ஏன் பாதகமானது, குறைவான பங்களிப்புக்கான காரணங்கள் என்ன, பெண்கள் பங்களிப்பை எப்படி ஊக்குவிக்கலாம் ஆகிய விடயங்களைச் சுருக்கமாக விபரிப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

### பங்கேற்பதன் முக்கியத்துவம்

விக்கியூடகம் இன்று பரந்து பயன்படுத்தப்படும் ஒரு தகவல் ஊடகம். இதில் உருவாக்கப்படும் உள்ளடக்கத்தில் பெண்களின் பங்களிப்பு இருப்பது முக்கியம் ஆகும். எழுதப்படும் தலைப்புகள், எழுதப்படும் முறை, விக்கி செயற்படும் நோக்கு ஆகியவற்றில் பெண்கள் தங்களின் உள்ளீடுகளை வழங்க முடியும். இல்லாவிடின் பெண்கள் தொடர்பான தலைப்புக்கள் போதிய அக்கறை பெறாமல் போகும் வாய்ப்பு உள்ளது.[2]

பல மொழிகள், பண்பாடுகள், துறைகள், ஈடுபாடுகளைக் கொண்டவர்கள், கட்டற்ற அறிவு என்ற ஒரே இலக்கோடு இணையும் களம் விக்கியூடகம். அதில் பெண்கள், பெண்களின் குரல்கள், பங்களிப்புக்கள் சிறப்பாக இருக்க வேண்டும். விக்கி அனைவரையும் உள்வாங்கும் பங்கு கொண்டது, எனவே அதில் இணைவது, செயற்படுவது இலகுவானது.[3] பெண்கள் உரிமைகள், பெண்கள் இயக்கத்தின் செயற்பாடுகளின் ஒரு நீட்சியாக இது அமையும்.[4]

## பங்களிக்க இருக்கும் தடைகள்

### நுட்பத் துறையில் பெண்கள்

மருத்துவம், சட்டம், ஊடகவியல் உட்பட்ட பல கல்வி, தொழிற்துறைகளில் பெண்கள் பெரும் முன்னேற்றம் கண்டு உள்ளார்கள். ஆனால் கணினியியல், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிகச் சொற்பமாகவே இன்னும் உள்ளது. விக்கியூடகங்கள் கணினி ஆர்வலர்களைக் கொண்டே முதலில் உருவானது. அதில் ஆண்களே அதிகம் இருந்ததால் பெண்கள் விக்கியூடகங்கள் பற்றி அறிவதற்கும் பங்களிப்பதற்கும் தொடக்கக் காலத்தில் இது ஒரு தடையாக அமைந்தது.

### இணைய அணுக்கம்

தமிழ் நாட்டில் அனைத்து இடங்களிலும் இணைய வசதி என்பது இயலாததாக உள்ளது. அவ்வாறே இருப்பினும் இணையத்தைப் பயன்படுத்தும் பெண்கள் மிகவும் குறைவு. அவ்வாறு பயன்படுத்துவோரும் அறிவை முடக்கும் பிற ஊடகங்களில் பயனற்ற பலவகை அரட்டைகளில் ஈடுபடுவோரே அதிகம். இணையத்தைப் பயன்படுத்துவோருக்கும் விக்கிப்பீடியா பற்றிய அறிமுகம் இல்லாமல் இருக்கிறது. அதையும் மீறி பங்களிக்க வருவோருக்கு விக்கித் தொழில்நுட்பம் சிறிது கடினமாகவே உள்ளது.

இலங்கைச் சூழலைப் பொருத்தவரை தமிழ் விக்கியில் பெண்கள் பங்களிப்பு என்பது அறவே கிடையாது. தமிழகத்தை விட இலங்கையில் இணையப் பயன்பாடு என்பது குறைவாகவே உள்ளது. ஏனெனில் அவர்களுடைய அரசியல் சூழல் மற்றும் சமுதாயச் சூழல்கள் அத்தகைய ஒரு வாய்ப்புக்கு இடமளிப்பதில்லை. ஆயினும் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ்ப்பெண்களுள் வளரும் நாடுகளில் உள்ள ஒரு சிலர் விக்கியின் பங்களிப்பாளர்களாகவே உள்ளனர்.

### விக்கியின் தன்மை

பல பெண்களுக்கு விக்கியின் இடைமுகம் இலகுவாக இல்லை. நீண்ட உரையாடல் பக்கங்கள் அவர்களுக்கு அயர்ச்சியைத் தருகின்றன. பல விக்கிப் பக்கங்களும் ஆண் ஆதிக்கத் தன்மையில் எழுதப்பட்டுள்ளன.[5] விக்கி நடை, சொந்தக் கருத்துக்களுக்கு இடம் கொடாமை, தனித்தமிழ், கிரந்த எழுத்துகள் தொடர்பான விவாதங்களும் சிலருக்கு விக்கி ஆர்வத்தைக் குறைக்கிறது.

### வேலைப்பளு

இன்றைய பொருளாதாரச் சூழலில் பெண்கள் வேலைக்குச் செல்வது என்பது தவிர்க்க முடியாததாகிறது. எனவே வேலைக்குச் செல்லும் பெண்கள் வேலை முடிந்து பிறகு இல்லப்பணிகளையும் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டி உள்ளதால் அவர்களுடைய வேலைப்பளுவின் காரணமாக இணையத்தில் நேரம் செலவழிப்பது என்பது இயலுவதில்லை. மேலும் தமிழ்ர்களின் வாழ்வியல் பின்னணி குடும்ப வேலைகளுக்காகவும் குடும்பப் பராமரிப்புக்கும் பெண்களையே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயச் சூழலில் உள்ளது. எனவே வேலைகளைக் குடும்பத்தினர் பகிர்ந்து கொள்ளாமை, தமிழ்ச் சூழலின் உணவு முறைகள், போன்ற காரணங்களால் பெண்களுக்கு இணையத்தில் நேரம் செலவிட முடிவதில்லை. கூடுதலாக தங்கள் குழந்தைகளின் பள்ளிப்பணிகளையும் வீட்டுப் பாடங்களையும் கவனிக்க வேண்டிய கட்டாயத்திற்கும் பெண்கள் தள்ளப்படுகின்றனர்.

### சமூக பண்பாட்டுச் சூழல்கள்

சமுதாயம் ஒரு சில கட்டுப்பாடுகளைத் தாமாகவே பெண்களுக்கென விதைத்துள்ளது. இதனால் ஒரு பெண் இல்லத்தில் இணைய தளத்தில் நேரம் செலவழித்தால் இன்றைய திசை திருப்பும் ஊடகங்களின் செயல்பாடுகள் காரணமாகவும் இணைய மோசடிகளின் காரணமாகவும் பெற்றோர்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. எனவே அத்தகைய சூழலில் பெண்கள் பங்களிப்பதற்கு முதல் தடையாக பெற்றோர்களே இருக்கின்றனர். மேலும் ஊதியம் பெறும் பெண்கள் கூட ஒரு வரையறைக்கு மேல் செலவு செய்ய அவர்களது குடும்பத்தார் அனுமதிப்பதில்லை.

### தன்னார்வம்

மேற்கண்ட ஒரு சில காரணங்களையும் தாண்டி தமிழின் மீதுள்ள மொழிப்பற்றும் தனது நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் சில பெண் பங்களிப்பாளர்கள் தமிழ் விக்கியில் பங்களிக்க வருகின்றனர். இது விக்கிப்பீடியாவிற்கு பக்க பலம் என்றாலும் அவ்வாறு வரும்போது பிற விக்கிப்பீடியர்கள் அவர்களது கட்டுரைகளில் செய்யும் தொகுப்புகளையும் மாற்றங்களையும் பெண் பயனர்கள் விரும்புவதில்லை. மேலும் தலைப்பு மாற்றுதல், நகர்த்துதல், கட்டுரைகளை நீக்குதல் போன்ற மற்ற பயனர்களின் கருத்துகளோ, செயல்பாடுகளோ இவர்களுடைய ஆர்வத்தை குறைத்து விடுகிறது. இதற்கு விக்கிக் கொள்கைகளைப் புரிந்து கொண்டாலே போதுமானது.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு அப்பால் பொதுவாகப் பெண்களிடம் விக்கிப்பீடியாவில் பங்களிப்பது குறித்த ஆர்வமின்மையே அதிகமாகக் காணப்படுகிறது. அவர்கள் சமூக ஊடகங்களில் திரையிடப்படும் தொடர் நாடகங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விவாதங்கள், திரைப்படங்கள் போன்றவற்றில் ஆர்வமாகத் தங்கள் நேரங்களைச் செலவழிக்கின்றனர். தமிழ் விக்கியில் பங்களிக்க வருவதனால் பலனெதுவும் பெறப்போவதில்லை என்பதும் அவ்வாறு வந்தாலும் தமிழ்த் தட்டச்சு தெரியாததும் இதற்கான காரணங்களாகும்.

### பங்களிப்பு நிலை

தமிழ் விக்கிப்பீடியாவைப் பொறுத்த வரை பெண் பங்களிப்பாளர்களாக 2006 களில் பங்களிப்பைத் தொடங்கிய சிந்துஜா, பின்னர் சந்திரவதனா, கலை, பூங்கோதை, பார்வதி ஆகியோரைக் குறிப்பிடலாம். இலங்கையைச் சேர்ந்த சிந்துஜா இராகங்கள் தொடர்பாகவும் இசைக்கருவிகள் தொடர்பாகவும் ஏராளமான கட்டுரைகளைத் தந்துள்ளார். நோர்வேயில் இருந்து பங்களிக்கும் கலை ஒரு மருத்துவ ஆய்வாளர். இவர் மருத்துவம், உயிரியல் துறைகளில் விரிவான பங்களிப்புக்களைச் செய்துள்ளார். சந்திரவதனா யேர்மனியில் வாழும் ஈழத்து எழுத்தாளர். தமிழ்ப் பெண் வலைப்பதிவு முன்னோடிகளில் ஒருவர். ஈழப் போராட்டம், இதழியல், அணி இலக்கணம் உட்பட்ட பல துறைகளில் கட்டுரைகள் பங்களித்துள்ளார். கோவையிலிருந்து பங்களிக்கும் ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்

பூங்கோதை கணிதத் துறையில் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். மிக விரிவான, எளிதான, மாணவர்களுக்குப் பயன்படும் நூற்றுக் கணக்கான கணிதக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சேலத்தைத் சேர்ந்த ஆசிரியர் பார்வதி அவர்கள் தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், தமிழர் கலைகள், கணிதம் உள்ளிட்ட துறைகளில் விரிவான பங்களிப்புக்களைச் செய்துள்ளார். கலை, பார்வதி ஆகியோர் நிர்வாகிகளாகவும் உள்ளனர். அண்மையில் தமிழ் விக்கிப்பீடியாவின் பத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஒன்றான கட்டுரைப் போட்டியின் காரணமாக நந்தினி கந்தசாமி என்ற பெண் பங்களிப்பாளரும் ஆர்வமுடன் பங்களிக்கத் தொடங்கியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், வலைப்பதிவாளர்கள் என மிகப்பரந்த வட்டத்திலிருந்து பெண் பங்களிப்பாளர்கள் பங்களிக்கின்றனர். ஆயினும் இவர்கள் தொடர்ந்து பங்களிப்பது இல்லை. இலங்கையில் இருந்து தமிழ்ப் பெண்களின் பங்களிப்பு அரிது, அல்லது இல்லை. புலம்பெயர் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் கணிசமாகப் பங்களிக்கின்றார்கள்.



**ஊக்குவிக்க முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள்**

விக்கியூடக அறக்கட்டளை பெண்களின் குறைவான பங்களிப்பை ஒரு சிக்கலாக அடையாளம் கண்டுள்ளது. பெண்கள் பங்களிக்க இருக்கும் தடைகளைக் களையும் வகையிலும், அவர்கள் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் விக்கியூடகம் பல செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. தொகுக்க இலகுவான காண்புல இடைமுகம் (Visual Editor) தற்போது அறிமுகப்படுத்தப்படுகிறது. இது நுட்ப தடை ஒன்றைக் குறைக்கும். பெண்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குகிறது. விக்கியில் ஏற்கனவே பங்களிக்கும் பெண் தொகுப்பாளர்கள் விக்கிப்பெண்கள் கூட்டகம் (WikiWomen's Collaborative) என்ற ஒரு செயற்திட்டத்தை

முன்னெடுத்துள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் விக்கிமேனியாவில் பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை விக்கிப்பெண்கள் நண்பகலுணவு (WikiWomen's Luncheon) நிகழ்வு ஊடாக உரையாடுகிறார்கள்.[6]

சில விக்கிகளில் பெண் பங்களிப்பாளர்கள் தமக்கென தனியே குழுமங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். வேறு சில விக்கிகளில் பெண் விக்கியர்கள் மாதமொரு முறை கூடி, செய்ய வேண்டிய பணிகள் குறித்து கலந்துரையாடுகின்றனர். மேலும் புதிய பெண் பங்களிப்பாளர்களை ஈர்ப்பதற்கும் அவர்களைத் தக்க வைப்பதற்குமான முயற்சியாக அவர்களுக்கான பட்டறை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்கின்றனர். தமிழ் விக்கியில் பெண் பயனர்களின் எண்ணிக்கை குறைவும் அப்பயனர்கள் வெவ்வேறு ஊர்கள் மற்றும் நாடுகளில் இருந்தும் பங்களிப்பதன் காரணமாகவும் அவர்களை ஒன்றிணைப்பது என்பது இயலுவதில்லை. மாற்றாக சமூக வலைதளங்களை இதற்காகப் பயன்படுத்துவதும் தொடர்ந்து பயிற்சிப் பட்டறைகளை வழங்குவதும் தேவையான ஒன்றாக உள்ளது.

மேலும் பங்களிக்க வருவோர்களிடத்து இறுக்கமான சில விக்கிக் கொள்களை உடனடியாகக் கட்டாயப்படுத்தாமல் அவர்கள் விக்கிக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் உதவிகள் செய்து அதன் பிறகு விக்கிக் கொள்கைகளுக்கேற்ப அவர்களைப் பங்களிப்பு செய்யும் வகையில் புதுப் பயனர்களுக்கு இடையேயான ஊடாட்டம் தொடர்பில் கவனம் கொண்டுவரப்பட்டுள்ளது. மாணவிகளுக்கான கட்டுரைப் போட்டிகள், பெண்களைப் பற்றிய, அவர்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய துறை சார் கட்டுரைகள் விரிவாக்கல் போன்ற திட்டங்களும் பரிசீலிக்கப்படுகின்றன.

தமிழ் விக்கியில் பங்களிக்கும் பெண்கள் சிறந்த முன்மாதிரிகளாக விளங்கிறார்கள். இருவர் நிர்வாகிகளாக செயற்படுகிறனர். பெரும்பாலான தமிழ்ப் பெண் பங்களிப்பாளர்கள் தமிழ் விக்கியூடகங்களை அறிமுகப்படுத்தும்

பணியில் சிறப்புக் கவனம் எடுக்கிறார்கள். பூங்கோதை 2012 விக்கிமேனியாவில் கலந்து கொண்டு, நேர்காணல்களை வழங்கினார். 2012 விக்கிமேனியா நிகழ்வில் பங்கேற்றுள்ளார். 2012 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய விக்கிமீடியா நிதி சேகரிப்பில் இவரது வேண்டுகோள் சிறப்பான இடம்பெற்றது. பார்வதி அவர்கள் பல்வேறு ஊடகங்களில் பரப்புரைப் பணிகளைச் செய்துள்ளார். 2013 விக்கிமேனியாவில் கலந்து கொண்டார்.

## நிறைவுரை

தமிழ் விக்கியூடகங்களில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக இருக்க சமூகம் சார், விக்கி சார் காரணங்கள் பல உண்டு. விக்கியூடகங்களில் விக்கி சார் காரணங்கள் களையப்பட வேண்டும். அதற்கான பல்வேறு செயற்திட்டங்களை விக்கியூடக அறக்கட்டளையும், பல்வேறு விக்கிகளும் மேற்கொண்டுள்ளன. பல களங்களில் பெண்கள் கொண்டுவந்த மாற்றங்கள் போன்றே விக்கியிலும் இது மிகவும் சாத்தியமே. பிற களங்கள் போல் அன்றி, விக்கியில் பல்வகைத்தன்மையும், உள்வாங்கும் பங்கும் இதை இலகுவாக்கும். இதை இன்றைய தமிழ்ப் பெண் விக்கியர்கள் மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களோடு இணைய மேலும் பலர் வருவீர்.

## மேற்கோள்கள்


1. Women Contributors Still Face Hurdles at Wikipedia
2. Define Gender Gap? Look Up Wikipedia's Contributor List
3. Wikimedia Diversity Conference
4. WikiWomen's Collaborative
5. Nine Reasons Women Don't Edit Wikipedia (in their own words)
6. Women at Wikimania 2013

(முதன்மைக்) கட்டுரையாளர்: பார்வதிஸ்ரீ

பார்வதிஸ்ரீ, தமிழ்நாட்டின் சேலத்தைச் சேர்ந்தவர். அரசு நடுநிலைப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களும், பெரியார் பலகலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றவர். செப்டெம்பர் 1, 2011 முதல் விக்கியில் பங்களித்து வருகிறார். தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், சிற்றிலக்கியம் அறிவியல் அறிஞர்கள், கணிதம் முதலியன குறித்த கட்டுரைகளை எழுதுவதில் ஆர்வமுடையவர். இவர் பங்களித்த கட்டுரைகளில் ஓணம், மதுரை சுங்குடி சேலை, தலையாட்டி பொம்மை, தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும், பிள்ளைத்தமிழ், நெப்பந்திசு, சிலப்பதிகாரத்தில் சமயக் கோட்பாடுகள், பட்டினப் பாலை, நிக்கோலாஸ் கோப்பர்னிக்கஸ், செம்பகராமன் பிள்ளை, ஆனந்த ரங்கம் பிள்ளை, ஆர்தர் சி. கிளார்க், கப்ரேக்கர் முதலியன சிலவாகும். இவர் விக்கி நூல்கள், பொது போன்ற விக்கியின் பிற திட்டங்களிலும் பங்களித்து வருகிறார்.



# லினக்ஸ் கட்டளைகள் சில :

| | | |
|---|---|---|
| 1 | fdisk | வன்வட்டு  பகிர்வு அட்டவணை கணக்கிடுவதற்கு பயன்படுகிறது |
| 2 | parted | வன்வட்டு பகிர்வு கணக்கிடும்  நிரல் |
| 3 | fsck | லினக்ஸ் கோப்பு அமைப்பை சரிபார்க்க மற்றும் பழுது பார்க்க பயன்படும் |
| 4 | mkfs | லினக்ஸ் கோப்பு அமைப்பை உருவாக்க பயன்படும் |
| 5 | at | பணிகளை பின்னர் இயக்க அவைகளை வரிசைபடுத்துதல் , ஆய்வு செய்தல் மற்றும் நீக்குதல் |
| 6 | arch | லினக்ஸ் கணினி இயந்திரத்தின் வன்பொருள் பெயரை காண்பிக்கும் |
| 7 | lsb_release | குறிப்பிட்ட லினக்ஸ் டிஸ்டிரிபியூஷன்  பற்றிய தகவல்களை காட்டும் |
| 8 | partprobe | வட்டு பகிர்வு அட்டவணை மாற்றம் குறித்த தகவல்களை அபெரடிங் சிஸ்டம் - மிற்கு தெரிவிக்கும் |
| 9 | apropos | மேன் பக்கங்களின் பெயர் மற்றும் குறிப்புகளையும் தேடும் நிரல் |
| 10 | aspell | எழுத்துப்பிழை சரிபார்க்கும் நிரல் |
| 11 | apt-get | உபுண்டு வகை லினக்ஸ் -இல் மென்பொருள் தொகுப்புகளை கையாளும் நிரல் |
| 12 | bg | bg கட்டளை ஒரு பணியினை பின்னணியில் நிறுத்த பயன்படுகிறது |
| 13 | fg | fg கட்டளை ஒரு பணியினை முன்னணியில்  நிறுத்த பயன்படுகிறது |
| 14 | apt-cache | apt cache-ஐ வினா செய்தல் |

| | | |
|---|---|---|
| 15 | apt-file | apt மென்பொருள் தொகுப்பை தேடும் நிரல் |
| 16 | lspci | அனைத்து pci சாதனங்களை பட்டியல் இடும் |
| 17 | bzip2 | தொகுப்புகளை (blocks) வகைபடுத்தி கோப்புகளை அளவில் சிறியதாக மாற்றும் நிரல் |
| 18 | basename | கோப்புகளின் பெயரிலிருந்து அடைவு மற்றும் பின்னொட்டுகளை அகற்றும் நிரல் |
| 19 | bc | தன்னிச்சையான துல்லிய கணக்கிடும் நிரல் |
| 20 | cat | கோப்புகளை ஒன்றிணைத்து வெளியீடாக காண்பிக்கும் |
| 21 | blkid | பிளாக் கருவிகளின் (block device)பண்புகளை காண்பிக்கும் |
| 22 | locate | பெயர்களை வைத்து கோப்புகளை கண்டுபிடிக்கும் |
| 23 | updatedb | Mlocate-காக தரவுத்தளத்தை புதுப்பிக்கும் |
| 24 | badblocks | சாதனத்தில் (badblocks) பேட் ப்ளக்ஸ் இருகிறதா? என்பதை தேடும் நிரல் |
| 25 | lscpu | சிபியூ கட்டமைப்பு பற்றிய தகவல்களை காண்பிக்கும் |

தனசேகர் tkdhanasekar@gmail.com

# தமிழ் விக்கியூடகங்களில் மாணவர்கள்

**நித்தியானந்தன் ஆதவன்**

தமிழ் விக்கியூடகங்கள் என்பது யாவராலும் தொகுக்கப்படக் கூடிய இணைய ஊடகங்கள் ஆகும். இதில் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள் போன்ற பலரும் பங்களிக்கின்றனர். இப்படி பல்வகைப்பட்டோர் பங்களிக்கும் விக்கியூடகங்கள் தன்னகத்தே கொண்டுள்ளவை ஏராளம். இதிலும் குறிப்பிட வேண்டியது, விக்கியூடகங்களின் உள்ளடக்கம் அனைவருக்கும் பயன் தரும் வகையில் அமைந்துள்ளது தான். அந்த வகையில் பல்வகைப்பட்டோர் பங்களிக்கும் விக்கியூடகங்களில் மாணவர்களின் செயற்பாடு பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பயன்படுத்துதல்

விக்கியூடகங்கள் இணையத்தை நன்முறையில் மாணவர்கள் பயன்படுத்த வழிவகை செய்யும் கருவியாக செயல்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். விக்கியூடகங்களை பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் போன்ற பாலர் பயன்படுத்தினாலும் அவர்களை விட மாணவர்களே அதிகமாக பயன்படுத்துகின்றனர். காரணம் அவர்களது கல்விக்கு விக்கியூடகங்கள் தேவைப்படுவதனாலேயாகும். விக்கியூடகங்களில் தேடுதலும் இலகுவானது மற்றுமொரு காரணமாகும். மாணவர்கள் விக்கியூடகங்களில் அதிகமாக விக்கிப்பீடியாவையே பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக, மாங்குடி ஊராட்சி ஒன்றிய தமிழக அரசு நடுநிலைப்பள்ளியில் மாணவர்கள் தமிழ் விக்கிப்பீடியாவை பாட வேலைக்குப் பயன்படுத்துகிறார்கள். “தமிழ் விக்கிபீடியா ஸ்டூடண்ஸுக்கு ரொம்ப உபயோகமா இருக்குங்க. பாடப்புத்தகத்துலே நாங்க பாடம் நடத்தி முடிச்சதும் அந்தப் பாடம் சம்பந்தமா விக்கிபீடியாவில் அவங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா பார்த்து தெரிஞ்சுக்குறாங்க. ஆசிரியர்களோட வேலைப்பளு இதனால குறையுது” என்று தலைமையாசிரியர் ஜோதிமணி கூறுகிறார்.

எனினும் விக்கியில் இருந்து தகவல்களைப் பயன்படுத்தும் போது மாணவர்கள் அவதனாமாக இருக்க வேண்டும். ஏன் என்றால் தவறனா தகவல்கள் இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. சில தகவல்கள் முழுமையாக இல்லாமலும் இருக்கலாம். ஆகவே சுட்டப்பட்ட மேற்கோள்களை பார்த்து உறுதிசெய்து பயன்படுத்தலாம். பேச்சுப் பக்கத்தை அவதானித்து மேலும் சிக்கல்களை அவதானிக்கலாம்.

### பங்களிப்பு

விக்கியூடகங்களை அதிகம் பயன்படுத்தும் மாணவர்கள் அதில் பங்களிக்கவும் முனைய வேண்டும். ஒரு சில மாணவர்கள் விக்கியில் தமது பங்களிப்பைத் தொடங்கியிருகின்றனர். தமிழ் விக்கிப்பீடியாவில் இவ்வளவு காலமும் சிறப்பாக மதனாகரன் எனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர் பங்களித்து வருகிறார். இவர் தமிழ் விக்கிப்பீடியாவின் நிர்வாகிகளுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவரால் கல்விச் சுமை காரணமாக தற்போது சிறப்பாக பங்களிக்க முடியவில்லை. இவரைப்போலவே கிருத்திகன் என்ற மாணவரும் இலங்கையிலிருந்து சிறப்பாக பங்களித்து வருகிறார். இவர்களைப் போலவே ஆதவன் எனும் பயனரும் யாழ்ப்பாணத்திலிருந்து பங்களிக்கிறார். ஜீவதுவாரகன் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து புதிதாக பங்களிக்க தொடங்கியுள்ளார். மேலும் தமிழ்நாட்டிலிருந்து அபிராமி எனும் மாணவரும் பங்களிக்க தொடங்கியுள்ளார். இவ்வாண்டு தமிழ் விக்கிப்பீடியாவின் பத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஒன்றான கட்டுரைப் போட்டியின் காரணமாக பிரபன் என்ற மாணவப் பங்களிப்பாளரும் யாழ்ப்பாணத்திலிருந்து பங்களிக்கத் தொடங்கியுள்ளார். இவற்றை வைத்துப் பார்க்கும் போது தமிழ் விக்கிப்பீடியாவில் மாணவர்களின் பங்களிப்பு இந்தியாவிலிருந்து மிகச்சொற்பமே. அதிகமாக மாணவர்கள் இலங்கையிலிருந்தும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்தும் பங்களிக்கின்றனர்.

### பங்களிப்பதால் கிடைக்கும் பயன்கள்

- மாணவர்களின் எழுத்துத் திறன் மேம்படும்: தமிழ் விக்கியூடகங்களில் மாணவர்கள் பங்களிக்கும்

கட்டுரைகளைப் பிற பயனர்கள் திருத்தி உதவுவார்கள். வரலாற்றுப் பக்கத்தில் திருத்தங்களை அவதானிப்பதன் மூலம் மாணவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்தலாம்.

- விக்கி, விக்கி நுட்பத்தை அறிந்து கொள்ளல்: விக்கி என்பது இணையம் ஊடாகப் பலர் கூட்டாகச் சேர்ந்து உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கான ஒரு மென்பொருள். மாணவர்கள் தமிழ் விக்கியூடகங்களில் பங்களிப்பதன் ஊடாக விக்கியில் தொகுப்பது பற்றி, விக்கித் தொழில்நுட்பங்கள் பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம்.
- விக்கிச் சமூகம்: உலகளாவிய அளவில் பன்மொழிகளில் விக்கியில் தொகுக்கும் தன்னார்வலர் சமூகத்தோடு மாணவர்கள் ஊடாட முடியும். ஒரு கட்டற்ற, கூட்டுறவு, கூட்டு மதிநுட்ப செயற்திட்டம் எப்படி சமூகத்தால் முன்னெடுக்கப்படுகிறது என்பதை நெருக்கமாக அவதானிக்கலாம். மேலும் பல்துறை சார்ந்த அறிஞர்களோடு பழக வாய்ப்புக் கிடைக்கும். இதன் மூலம் மாணவர்களின் பல்துறை அறிவு விருத்தி அடையும்.
- தமிழ்க் கல்வி: தமிழ்க் கல்விக்கு தமிழ் விக்கியூடகங்கள் ஒரு முதன்மை இணைய கல்வி வளம் ஆகும். தமிழ்க் கல்விக்கு வாசிப்பு, எழுத்து, கலைச்சொற்கள், அறிவியல் தமிழ் எனப் பல முனைகளில் தமிழ் விக்கியூடகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- தமிழ்த் தட்டச்சு: தமிழ் விக்கியூடகங்களில் பங்களிப்பதன் மூலம் மாணவர்கள் தமிழ் தட்டச்சு பழகலாம். இது அவர்களது கல்வி வாழ்க்கைக்கு உதவலாம்.
- தகவல், அறிவு, பல்லூடகங்கள்: விக்கியூடகங்கள் பல்துறைகளில் பல வகை அறிவுத் தகவல்களைக் கொண்டுள்ளன. விக்கியில் பங்களிப்பதன் ஊடாக விக்கி வளங்களைத் திறனாகப் பயன்படுத்துவது பற்றி அறிந்து கொள்ளலாம்.
- மகிழ்ச்சி, பொழுதுபோக்கு: விக்கியில் பங்களிப்பது மகிழ்ச்சியைத் தரும் ஒரு செயற்பாடு ஆகும். மேலும் இது ஒரு பொழுதுபோக்கு ஆகும்.

- சமூக சேவை: விக்கிப் பங்களிப்பு ஒரு வகைச் சமூக சேவை ஆகும். இது பல மக்களின் அறிவுப் பசியைத் தீர்க்க உதவும்
- கல்வி வளர்ச்சி: விக்கியில் தொகுக்கும் போது அல்லது கட்டுரை எழுதும் போது அது மாணவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். இதன் மூலம் மாணவர்களின் அறிவும் வளர்ச்சி அடையும். மேலும் பல்வகையான பொருள்கள் பற்றி கட்டுரைகளைத் தொகுப்பதால் பொது அறிவும் வளரும்.
- புகைப்படக்கலை: மாணவர்கள் எடுக்கும் ஒளிப்படங்களை, நிகழ்படங்கள் விக்கி பொதுவில் பதிவேற்றுவதன் மூலம் பொழுதுபோக்காகவும் அவர்களுக்கு நன்மையாகவும் அமைகிறது.

## பங்களிக்க வராமைக்கான காரணங்கள்

பெரும்பாலான மாணவர்கள் விக்கி ஊடகங்களைப் பயன்படுத்தினாலும் அதில் தாங்களும் தொகுக்கலாம் என அறியவில்லை. விக்கி கொள்கைகளைப் பற்றியும் போதுமானளவு அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்தோரும் ஆர்வமில்லாமையால் பங்களிப்பதில்லை. அவர்கள் விக்கிப்பீடியாவில் தொகுப்பதால் எப்பயனும் இல்லை என நினைக்கலாம்! ஆர்வமில்லாமைக்கு முக்கிய காரணம் தமிழ் தட்டச்சு தெரியாமையாகும்.

மாணவர்கள் தமது முக்கிய தொழிலாகக் கல்வியையே கொள்கின்றனர். இக்கால மாணவர்களுக்கு அது ஒரு மனச்சுமையாகவும் மாறிவிடுகிறது. பெற்றோர்களால் எப்போதும் மாணவர்கள் படிப்பதற்கே உந்தப்படுகிறார்கள். அதனால் அதில் மிகுதியாக உள்ள நேரத்தைத் தாம் விரும்பிய முறையில் செலவழிக்க முனைகிறார்கள். விக்கிப்பீடியாவில் பங்களிக்கும் நேரத்தை விளையாடுவதற்கோ, அல்லது இதர தேவைகளுக்காகவோ பயன்படுத்த எண்ணலாம். மேலும் சிலர் இது தமது கல்வியை பாதிக்குமோ என பயப்படுகின்றனர். விக்கிப்பீடியாவால் தமக்கு விளையும் பயன்கள் பற்றித் தெளிவில்லாமலும் இருக்கலாம். மேலும் தமிழ் விக்கிப்பீடியாவிற்கு பங்களிக்க எண்ணம் அதிகம் இருந்தாலும் அதற்குப் பெற்றோர்கள் அனுமதிப்பது முக்கியம். அந்த அனுமதி கிடைக்காவிட்டால் பங்களிப்பது சிரமம் தான். இதற்காக அவர்கள் சிறிது

நேரத்தை ஒதுக்குவதற்கு வேண்டலாம்.

விக்கியூடகங்களை மாணவர்கள் தொகுக்க முனைந்தாலும் விக்கி நுட்பத்தை இலகுவில் புரிந்து கொள்ள அவர்களால் முடிவதில்லை. ஆகையால் விக்கியூடகங்களைத் தொகுப்பதால் ஏதேனும் பிரச்சினைகள் வந்துவிடுமோ என அஞ்சுகின்றனர். ஆகையால் விக்கிப்பீடியாவிற்கு வருவது தமது தேவைகளைப் பூர்த்தி செய்வது, செல்வது என்றே பல மாணவர்கள் உள்ளார்கள். விக்கி தொழில்நுட்பம் பற்றி இவர்களுக்குப் போதிய அறிவும் விளக்கமும் இல்லை என கூறலாம்.

### மாணவர்களை ஈர்க்க சில வழிகள்

மாணவர்கள் விக்கியூடகங்களை அதிகம் பயன்படுத்தினாலும் விக்கியூடகங்களில் பங்களிக்க வருவதில்லை, அதற்கான காரணங்களை மேலே பார்த்தோம். இதை மாற்றியமைக்க விக்கி செய்யக்கூடிய சில விடயங்களை கவனிப்போம். விக்கியூடக மன்றத்தை பள்ளிகளில் உருவாக்குவது மிகவும் உதவும். இதன் மூலம் மாணவர்கள் விக்கியை இலகுவில் அணுகமுடியும். சிறந்த பரப்புரையாகவும் அமையும். இங்கே விக்கித் தொழில்நுட்பம் பற்றிய விளக்கத்தை எடுத்துரைக்கலாம். தமிழ் தட்டச்சு தெரியாதவர்களுக்கு தமிழில் தட்டச்சுப் பயிற்சி தேவைப்படின் ஈடுபாடு உள்ளவர்களுக்கு அதற்கான பயிற்சிகளை ஒழுங்குபடுத்தி உதவலாம். இதன் மூலம் தமிழ் தட்டச்சு தெரியாதவர்கள் அதைக்கற்றுக்கொண்டு விக்கியில் பங்களிக்க வருவார்கள். தமிழ் தட்டச்சு மட்டும் இல்லாமல், நிரலாக்கம், ஒளிப்படக்கலை, நிகழ்படக்கலை, வரைகலை, விக்கியில் தொகுப்பது போன்று ஒரு மாணவர் குழுவிற்கு ஈடுபாடு உள்ள, தேவையான திறன்கள் தொடர்பாக பயிற்சிகள் ஒழுங்கமைத்து உதவலாம். இது அவர்களுக்கு பிடித்தமான துறையிலேயே பங்களிக்கத் தூண்டும். மேலும்,இது அவர்களது ஈடுபாட்டைக் கூட்டுவதோடு ஆர்வத்தையும் வளர்க்கும். பள்ளியில் ஆசியர்கள் விக்கியில் பங்களிப்பதை ஒரு பயிற்சியாக வழங்கலாம். இதன் மூலம் விக்கிப் பயன்பாடு பலரிடையே பரவும் என்பதில் சந்தேகமில்லை. இதை விக்கியோடு இணைந்து செய்வது வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டில், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விக்கிப்பீடியா மாணவர் மன்றம் அமைக்கும் செயல்பாடுகள்

தொடங்கப்பட்டிருக்கின்றன. இம்மன்றங்கள் விக்கியூடகங்களை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்துவதோடு, விக்கியூடகங்களில் இருக்கும் பல்வேறு தகவல்களை மாணவர்கள் அறிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கும் வழிகாட்டுகின்றன. மேலும், விக்கியூடகங்களில் மாணவர்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பதையும் இம்மன்றங்கள் விளக்கியுரைத்து, மாணவர்களை ஊக்குவிக்கின்றன.

## முடிவுரை

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு விக்கியூடகங்கள் தற்காலத்தில் இன்றியமையாத ஒன்றாகும் நிலைமை உருவாகின்றது. அதைப்போலவே மாணவர்களின் பங்களிப்பும் விக்கியூடகங்களில் முற்காலத்தை விட அதிகமாகத் தான் உள்ளது. எனினும் சில காரணங்களால் மாணவர்களால் விக்கியூடகங்களில் பங்களிக்க முடியவில்லை. தற்போதைய காலகட்டத்தில் கல்விக்கூடங்களில் விக்கியூடக மன்றங்கள் ஆரம்பமாகத் தொடங்கிள்ளன. இம்மன்றங்கள் அளிக்கக் கூடுமான உந்துதலும் ஊக்கமும் மாணவர்களின் பங்களிப்பை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.




பெரியார் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரியில் தமிழ் விக்கிப்பீடியா பயிலரங்கம்

[தமிழ் விக்கிப்பீடியா மற்றும் தமிழ்க் கணினிப் பயிலரங்கம், சேலம், செப்டம்பர் 11, 2012]



**கட்டுரை ஆசிரியர் பற்றிய விபரம்: நித்தியானந்தன் ஆதவன்**



நித்தியானந்தன் ஆதவன் இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் யாழ் இந்துக் கல்லூரியில் 8 ஆம் வகுப்பில் கல்வி பயின்று வருகிறார். பாடசாலைத் தேவைகளுக்காக கூகிள் தேடி தமிழ் விக்கிப்பீடியா வந்தவர் இன்று பல்வேறு பங்களிப்புக்களைச் செய்து வருகிறார். அவரோடு இணைந்து யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து மேலும் பல மாணவர்கள் தமிழ் விக்கியில் இணைந்து பங்களிப்புச் செய்துவருகிறார்கள்.

# தமிழ்விக்கி 10-ஆம் ஆண்டு விழாவில் சென்னையில் மயூரநாதன் ஆற்றிய உரை !

http://rssairam.blogspot.com/2013/09/10_30.html

சங்கர ராமசாமி



தமிழ் விக்கிப்பீடியாவிற்கு அஸ்திவாரமிட்ட முதல்வர்
இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து துபாயில்
கடந்த 20 ஆண்டுகளாக வசித்துவரும்
கட்டிடக்கலைப் பொறியாளர்
மயூரநாதன்

---------------------------------------------------------------------------------------------------------------------

தமிழ் விக்கிப்பீடியா, விக்கிப்பீடியா கலைக் களஞ்சியத்தின் தமிழ் மொழி பதிப்பு ஆகும். செப்டம்பர் 2003 ல் இது தொடங்கப்பட்டது. 2009, நவம்பர் மாதம் இதன் கட்டுரைகளின் எண்ணிக்கை இருபதாயிரத்தை தாண்டியது. ஏனைய மொழி விக்கிப்பீடியா கட்டுரைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 2012 சனவரி மாதக் கணிப்பின் படி தமிழ் விக்கிப்பீடியாவின் 59 வது இடத்தில் உள்ளது. தமிழ் விக்கியில் இன்று வரை மொத்தம் 51,260 கட்டுரைகள் உள்ளன. இந்திய மொழி விக்கிகளில் மூன்றாவது இடத்திலும், திராவிட மொழி விக்கிகளில் இரண்டாவது இடத்திலும் தமிழ் விக்கி உள்ளது. குறைந்தது 250 எழுத்துகள் கொண்ட கட்டுரைகள் என்று பார்த்தால், இந்திய மொழிகளுள் தமிழ் இரண்டாவதாக உள்ளது. வரலாற்று நோக்கில் தமிழ் விக்கிப்பீடியாவின் வளர்ச்சியை இந்திய மொழி விக்கிகளின்

வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்க இந்திய மொழிகள் விக்கி ஒப்பீடு என்னும் பக்கத்தைக் காணவும்.

தமிழ் விக்கிப்பீடியா குறித்த தரவுகள்

பக்கங்கள்= 1,41,898
கட்டுரைகள்= 51,260
கோப்புகள்= 8,713
தொகுப்புகள்= 13,71,133
பயனர்கள் = 47,579
சிறப்பு பங்களிப்பாளர்கள்= 249
தானியங்கிகள் = 93
நிருவாகிகள் = 29
அதிகாரிகள் = 4

சென்னை, கிண்டியில் உள்ள அண்ணா பொறியியல் கல்லூரி வளாகத்தில் விக்கிபீடியாவின் 10-ஆம் ஆண்டுவிழா நேற்று 30-09-2013 ஞாயிறு முழுவதும் கோலாகலமாக நிகழ்ந்தது. அரங்கம் நிறைந்த கூட்டம். பங்கேற்றோரில் பாதிக்கும் மேற்பட்டோர் இளைஞர்கள் என்பதும் ஓர் சிறப்பம்சம். கூட்டத்தில் தமிழ்விக்கியை முதன் முதலில் எழுதத் துவங்கிய - அஸ்திவாரமிட்ட ஈழத்து கட்டிடப் பொறியாளர், மயூரநாதன் ஆற்றிய உரையிலிருந்து ஓர் பகுதி பின்வருமாறு :

--------------------------------------------------------------------------------------------------------

அனைவருக்கும் வணக்கம் .

இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவன், நான்.. காலத்தின் கட்டாயத்தால் புலம் பெயர்ந்தவன். கட்டிடப் பொறியாளரான எமக்கு உலகிலேயே முதலாவதான கட்டிடக்கலை நிறுவனத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. ஆம்! கடந்த 20 ஆண்டுகளாகத் துபாயில் வாழ்க்கை தொடர்கின்றது. தமிழின்பால் கொண்ட ஈடுபாடும், துபாயில் கிடைத்த ஓய்வு நேரமும், ஆங்கில விக்கிபீடியாவின் தாக்கமும் தமிழ் விக்கியில் எழுதத் தூண்டியது.

எமக்கு IT குறித்த பயன்பாடு தெரியாது. இந்நிலையில் சுந்தர், IT பின்னணி கொண்டவரும் எம்முடன் தமிழ் விக்கி பணியில் இணந்து கொள்கின்றார். பின்னர் ரவி வருகின்றார். அவர் ஒரு செயல் வீரர். அவர் தமிழ் விக்கியில் எழுதிய கட்டுரைகளவிட, அவரது தூண்டுதலால் எழுதப்பட்ட கட்டுரைகள் 1000-க்கு மேல் இருக்கும்.

நக்கீரன், கனகு பின்னர் தமிழ் விக்கியில் இணைந்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகின்றனர். அதன்பின் கனடாவில் வாழும் பேராசிரியர் செல்வகுமாரின் வருகையால் தமிழ் விக்கி பெரிதும் விரிந்து குறிப்பிடத்தக்க அளவில் உலகில் தமிழுக்கென்று ஓர் முகமும் ( அடையாளம் அல்லது முகவரி )கிடைத்தது.

தமிழ் விக்கியில் எழுதத் துவங்கியபோது, இந்திய மொழிகளில், சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு ஆகியவை விக்கிபீடியாவில் இடம்பெற்றிருந்தன, சமஸ்கிருதம்தான் முன்னணியில் நின்றது.

எழுதப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே முதல், இரண்டாம் இடங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் தரம் வாய்ந்த கட்டுரைகளே முக்கியம். தரமுள்ள கட்டுரைகள் தமிழில் அவதானமாகத்தான் ( குறைந்த அளவில்தான் ) இடம்பெற்று வந்தன. ,

ஆனால், உறுதியான விக்கிப்பீடியா சமூகத்தினரைத் தமிழர் உருவாக்கியுள்ளனர். 2010-க்குப்பின் சேர்ந்தோர் தரத்துடன் கூடிய அதிகக் கட்டுரைகளைப் பங்களிப்புச் செய்து தமிழ்க் கட்டுரைகளின் எண்ணிக்கையையும் உயர்த்தியுள்ளனர்.

இத்தொண்டில் ஈடுபடுவோருக்குப் பண அளவில் எந்த லாபமும் கிடையாது. உலகளாவிய நிலையில் விக்கிமீடியாவை கூட்டுமுயற்சியில் வளர்ப்பது குறித்த ஆய்வு ,பின்வரும் முடிவுகளைத் தருகின்றன.

01. விழுமியம் - VALUES - அறம் சார்ந்த செயல்களை வளர்த்தல்

02. சமூகம் சார்ந்த மனத் திருப்தி கிடைத்தல்.

03. புரிதல், சார்ந்த விஷயம் -கட்டற்ற தகவல்களை அறிந்து கொள்ளுதல்

04. தொழில் மேம்பாட்டிற்காக ஈடுபட்டு உழைத்தல்

உலகின் மிகப்பெரிய NO 1 நிறுவனத்தில் விக்கிபீடியாவிற்காக விடுமுறை எடுக்கும்பொழுது ஓர் பெருமிதம் ஏற்படுகின்றது. எல்லோரையும் திரும்பிப்பார்த்து யோசிக்க வைக்கின்றது. பாதுகாப்பு அம்சங்களுக்காகக்கூட விக்கியில் பங்கேற்க வருகின்றனர். அவரவர் திறமை வெளிப்படுவதோடு மகிழ்ச்சியும் கிடைக்கின்றது.

விக்கிப்பீடியா பயனர்களுக்கு குறிக்கோள் மிகவும் முக்கியமானது. கட்டற்ற முறையில் தமிழ்மொழி மூலமாக தமிழர்களின் அறிவு வளர்ச்சிக்கு தொடர் பங்களிப்புச் செய்து ஊக்குவித்து விக்கிப்பீடியா உலகளாவிய அளவில் உதவி வருகின்றது.

நோக்கம் - ஃ FUN - மகிழ்ச்சி !

ஊடகத்தின் POWER -தமிழ் மிக முக்கியமானது. அறிவு மேம்பாட்டிற்காக என்பது மட்டுமல்ல. உள்ளாற்றலைப் புரிந்துகொண்டு செயல்படவும் விக்கிப்பீடியா ப்யனர்களுக்கும் -பயன்படுத்துவோருக்கும் உதவுகின்றது.

எழுதும்போது கலைச் சொற்கள் பெரும் பிரச்சினையாக உள்ளன. வெவ்வேறு நாடுகளிலும் பயன்படுத்தும் கலைச் சொற்களை ஒன்றாக்கும் பெரும்பொறுப்பு நமக்கு உள்ளது.

விக்கிப்பீடியா எல்லோருக்கும் ஒரு மையதளமாக அமையக்கூடும்.

இந்தியாவில் எழுதும் கட்டுரைகளில் உள்ள வார்த்தைகள் இலங்கையில் படிக்கும் மாணாக்கனுக்குப் புரியுமா ? இந்தியப் பயன்பாட்டுச் சொல்லின் பொருளையும் விளக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் எந்த அரசையும் அல்லது எந்த நிறுவனத்தையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

நன்றி, வணக்கம்.

---

விக்கிப்பீடியா 10-ஆம் ஆண்டு விழா நிகழ்வின் மாட்சிகளை எடுத்துரைக்க வார்த்தைகள் இல்லை. 29-09-2013 காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நிகழ்ந்த கூட்டத்திற் பங்கேற்றோர் புத்துணர்ச்சி பெற்றுத் திரும்பினர் என்று ஒரே வார்த்தையில் மட்டும் இங்கு குறிப்பாகக் கூறலாம்.

இதர நிகழ்வுகள் கணினியில் இடம்பெற்றுள்ள பலரது வலைப்பூக்களில் - வலைத்தளங்களில்- இணையங்களில் முகநூல்களில் விரிவாகப் படங்களுடன் வெளிவரும். உள்ளூர் மற்றும் அயல்நாட்டில் வாழும் விக்கிப் பயனர்கள் 28-09-2013 மேற்கொண்ட மகாபலிபுரச் சுற்றுலாக் காட்சிகளையும் விரைவில் கண்டு மகிழலாம்.

தமிழகத்தின் அனைத்து பள்ளி கல்லூரிகளிலும் தமிழ் விக்கிப் பயனர்களை
உருவாக்கிடும் நன்னோக்கில் , அமைப்புக்களை உருவாக்குவோம். வெற்றியும் ஈட்டுவோம். நாளை நமதே !

# துருவங்கள் - 3

காட்சி 3

மீண்டும் ஒரு மாலைப்பொழுது, கதை கேட்கும் ஆர்வத்தில் கார்த்திகா மதனின் இடத்திற்கு சிறிது சீக்கிரமாகவே வந்துவிட்டாள், "என்ன ப்ரதர், டாஸ்க் எதுவும் இல்லையா, நியுஸ் படிச்சிட்டு இருக்கீங்க." கேட்டவாரே அருகில் இருந்த சேரில் அமர்ந்தாள். "வாங்க.. வேலையெல்லாம் முடிச்சாச்சா?", விசாரித்தான் மதன். "லினக்ஸ்சோட கதைய கேட்க சீக்கிரமா வந்துட்டேன். சீக்கிரம் ஆரம்பிங்க.", அவசரப்படுத்தினாள்,

மதன்: ஸ்க்ரீன ஒப்பன் பண்ணா.. ஒரு பெரிய ரூம்.. அங்க ஒரு பெரிரிரிரிரிரிய்ய்ய்யயயய.. மெஷின். அதுக்கு பேரு மெயின்ப்ரேம். 1950 ஸ்ல வந்த மெயின்ப்ரேம்ஸ் எல்லாம் ஒரு நேரத்துல ஒரே ஒரு வேலைய மட்டும் செய்ற பேட்ச் ப்ராஸ்ஸிங் மெஷின்களா இருந்துச்சு. இந்த நெலமய மாத்த ஒரே சமயத்துல எத்தன பேரு வேணும்னாலும் வேல செய்யறா மாதிரி ஒரு டைம் ஷேரிங் ஆப்ரேட்டிங் சிஸ்டத்த உருவாக்க MIT ல ஒரு குருப்பு மண்டைய பிச்சுக்கிட்டிருந்தாங்க (project MAC). இவங்க கூட BellLabs ம் GE ம் சேர்ந்துக்கிட்டாங்க.  இவங்க எல்லாரும் சேர்ந்து ஒரு பெரிய ப்ராஜக்டா உருமாறி அதுக்கு மல்டிக்ஸ்னு (multics) பேரும் வெச்சுக்கிட்டாங்க.  இவங்க எல்லாரும் MIT ல இருந்த ஒரு ரிசர்ச் சென்டர்ல மல்டிக்ஸ்ச உருவாக்கிட்டிருந்தாங்க.

கார்த்திகா: MIT, BellLabs, அப்புறம் GE.. மேல சொல்லுங்க..

மதன்: ஆனா இந்த மல்டிக்ஸ் ப்ராஜக்ட்டுக்கு நிறைய பைனான்ஸ் பண்ண வேண்டி இருந்தது. அவ்வளவு செலவு செஞ்சும், எந்த ஒரு நல்ல இம்ப்ரூவ்மெண்டும் இல்ல, இதுக்கும்மேல கண்டினியூவ் பண்ணா கஞ்சிக்கு கூட

லாட்ரி அடிக்கனும்னு முடிவுபண்னி 1969 ல BellLabs ப்ராஜக்ட்ல இருந்து வெளியில வந்துட்டாங்க. இங்கதான் பிதாமகன்கள் இரண்டுபேர அறிமுகப்படுத்தப் போறேன். ஒருத்தர் பேரு Ken Thomson இன்னோருத்தர் பேரு Dennis Ritchie, இவங்க ரெண்டு பேரும் BellLabs காக மல்டிக்ஸ் ப்ராஜக்ட்ல வொர்க் பண்ணவங்க.

கார்த்திகா: Dennis Ritchie.. பேர எங்கேயோ கேள்விபட்டிருக்கேன்..

மதன்: கேள்விப்பட்டிருப்பீங்க. இந்தியாவ கண்டுபிடிக்ரேன்னு சொல்லிக்கிட்டு கப்பல்ல ஏறி வரும்போது காத்தடிச்சு வழிதெரியாம அமெரிக்கால லேன்டானவரு இவர்தான்.

கார்த்திகா: ஆமால்ல.... இல்ல.. அவரு பேரு கொலம்பஸ்.. எனக்கேவா.. நாங்களும் ஹிஸ்ட்ரி படிச்சிட்டுதான் வந்திருக்கோம்.. கதைக்கு வாங்க..

மதன்: BellLabs கு ரிட்டர்ன் ஆன ரெண்டு பேரும் அவங்க மல்டிக்ஸ்ல கத்துக்கிட்டத அவங்களோட க்ளோஸ் ப்ரண்ஸ்கிட்ட ஷேர் பண்ணிக்கிட்டாங்க, அவங்ல முக்கியமானவரு Doug McIlroy இவங்க ரிசர்ச் சென்டரோட வருங்கால ஹெட். வந்தவங்க ரெண்டுபேரும் பென்ச்ல இருக்கோமே ஒரு டூர் அடிக்கலாம்னு இல்லாம, எங்களுக்கு ஒரு மெஷின் வேணும் மல்டிக்ஸ் பத்தி நிறைய ஐடியா இருக்குன்னு கம்பனிகிட்ட கேட்டாங்க. போங்கடா, பொழப்புகெட்ட பசங்களா, நீங்க குருவி வெடி வெடிக்க நான் காச கரியாக்கனுமா? அப்டீன்னு சொல்லி ப்ரபோசல ரிஜக்ட் பண்னிட்டாங்க.

கார்த்திகா: குருவி வெடி.. :) அப்றம்..

மதன்: அப்பத்தான் இவங்க கிட்ட ஓரங்கட்ன ஒரு PDP-7 மெஷின் கெடச்சது. தாம்சன் என்னபன்னாறு, அவரு எற்கனவே மல்டிக்ஸ்ல எழுதின ஸ்பேஸ் ட்ராவல் கேம, இவங்ககிட்ட இருக்குற ஐடியாக்கல யூஸ்பண்ணி

PDP-7 னின் அஸம்லில எழுதிட்டாரு. இதுல கெடச்ச கான்ப்பிடன்ச வெச்சு, ப்ரேண்ஸ் எல்லாரும் சேர்ந்து PDP-7 ல ஒரு ஆப்ரேட்டிங் சிஸ்டத்த உருவாக்கிட்டாங்க. இதுக்கு UNICS னு பேரும் வெச்சுட்டாங்க. இவங்கள்ல ஒருத்தரான Kerningen ன்றவருக்கு s புடிக்காம அத x ஆ மாத்தி, UNIX ஆக்கிட்டாரு. இது நடந்தது 1970.

கார்த்திகா: வாவ்.. UNIX வந்தாச்சா..? அப்றம்..

மதன்: கொஞ்ச நாள்லையே Doug McIlroy ரிசர்ச் சென்டர் ஹெட் அனாரு, இவங்களோட வெர்க் புடிச்சுபோக, இவங்களுக்காக PDP-11 வாங்க கம்பெனிக்கு சஜஸ்ட் பண்ணாரு. PDP-7 ல இருந்து PDP-11 க்கு UNIX பேர்ட் பன்னாங்க, கூடவே கம்பெனிக்கு தேவையான ஒரு சாப்ட்வேர அதுல ரன் பண்ன வச்சாங்க. தாம்சன் அதேநேரம் ஈஸியா ப்ரோக்ராம் எழுத B னு ஒரு லாங்வெஜ BCPL ன்ற லாங்வெஜ்ல இருந்து உருவாக்குனாரு, அத Dennis Ritchie இன்னும் மெருகேத்தி ஈஸியா ப்ரோக்ராம் எழுத ரொம்ப ஈஸியான லாங்வேஜா மாத்திட்டாரு. அதுக்கு பேரு C னு வெச்சுட்டாரு. ப்ரெண்ஸ் எல்லாரும் மருபடியும் சேர்ந்து அசம்லில இருந்த UNIX ச C ல எழுதிட்டாங்க. இப்படித்தான் C லாங்வேஜ் வந்தது. இது நடந்தது 1972. இவங்க எக்ஸ்ராவா, நிரைய கமாண்ஸ்களையும் UNIX காக C ல எழுதிட்டாங்க, அப்படி வந்துதான் ls, grep, cut, mv எல்லாம்.

கார்த்திகா: ம்.. கரெக்ட்.. C லாங்வேஜ்.. Dennis Ritchie.. இப்பதான் நியாபகம் வருது.. C ரொம்ப ஈஸியான லாங்வேஜா??? இருக்கட்டும்..

மதன்: அது அவங்களுக்கு உங்களுக்கில்ல..

கார்த்திகா: என்னது...?????? சரியா கேட்கல??

மதன்: நமக்கு..... கஷ்டமானதுன்னு சொன்னேன் ஸிஸ்டர், வேர ஒன்னும் இல்ல..

கார்த்திகா: சரி மேல சொல்லுங்க.. ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா.. போகுது..

மதன்: அதுக்கப்புறம் BellLabs ல மட்டும் இருந்த UNIX ச தாம்ஸன் என்ன பன்னாரு, அவர் படிச்ச Berkeley யூனிவர்சிட்டி ரிசர்ச் பசங்களுக்கு காண்பிச்சு கத்தும் கொடுத்துட்டாரு. அங்க இருந்த பசங்கள்ல ஒருத்தர்தான் Bill Joy, இவரு கையும் காலையும் வச்சிகிட்டு சும்மா இல்லாம, vi எடிட்டர எழுதிட்டாரு. இதபார்த்த பசங்க நீ மட்டும்தான் எழுதுவியா, நானும் எழுதுறம்பாருன்னு எகத்துக்கும் UNIX கமாண்ஸ்ச C ல எழுத ஆரம்பிச்சுட்டானுங்க. அப்படி வந்ததுதான், sed, awk எல்லாம். இதுக்கிடையில ஆர்மி இந்த பசங்ககிட்ட வந்து தியரியா இருக்குற ஒரு நெட்வெர்க் டிசைன இம்லிமெண்ட் பண்ன சொன்னாங்க. அதுக்கு பேருதான் OSI Reference Model, இவனுங்க அத இம்ளிமெண்ட் பண்னதுக்கு பேருதான் TCP/IP protocol stack. இந்த ஸ்டேக்க ஆர்மி எடுத்துட்டு பேய் ஆவங்க கிட்ட இருந்த UNIX ஸிஸ்டங்கள்ல இன்டால் பன்னி ARPANET உருவாக்குனாங்க, அதுதான் இன்னிக்கு INTERNET ஆ வளர்ந்து நிக்குது.

கார்த்திகா: ப்பா.. INTERNET பொறந்ததே UNIX லயா.. சூப்பார்ப்.. பர்ஸ்டைம் இத கேள்விப்படரேன்..

மதன்: சிஸ்டர்.. சாப்ட்வேர் இன்டஸ்ட்டீல நடந்த மேஜர் ஈவன்ஸ் எல்லாம் UNIX வழி வந்த ஆப்ரேட்டிங் சிட்டங்கள்லதான் நடந்தது, ஒன்ன தவிர..

கார்த்திகா: அந்த ஒன்னு என்னது?

மதன்: அதப்பத்தி அப்புறமா சொல்ரேன்.

இவர்கள் பேசிக்கொண்டிருப்பதை பார்த்த சுரேஷ், கலாய்பதாக நினைத்துக்கொன்டு, குட்டையை குழப்பினான்,

"அட்மின், இவகிட்டயா மாட்நீங்க.. அனேகமா நாலைக்கு டாக்டர்ட உங்க காத காட்டவேண்டிருக்கும் சிக்கிறமா வீட்டுக்கு எஸ்கேப் ஆயிடுங்க, உங்க பசங்க தேடப்போராங்க" சொல்லிவிட்டு மதன் அடிக்க வருவானோ என்று பயந்து ஓடிவிட்டான். "என்னது பசங்களா??? எனக்கா??? " மதனை முறைத்தவாறே கேட்டாள். "நீங்க சோன்ன அதே 'ஐயாம் 32 நவ்' பொய், அத அப்டியே மெயின்டேன் பன்னுங்க, அதுதான் உங்களுக்கும் நல்லது எனக்கும் நல்லது" சமாளித்தான் மதன். "என்ன பாத்தா 32 மாதிரியா தெரியுது", கடுப்பாகி கேட்டாள். "இதத்தான் போனானே அவனும் கேட்டான். அதுக்கு நான் ஒன்னு சொன்னேன், நம்பிட்டான்" என்றான். "என்ன சென்னீங்க.." என்றாள், "சொன்னா டென்ஷன் ஆக கூடாது" என்றான், "நான் ஏற்கனவே கடுப்லதான் இருக்கேன்.. என்ன சொன்னீங்க..??" வெறித்தனமாக கேட்டாள். "ஐக்லாஸ் ஆன்டிங்கள்லாம் சின்ன பொண்னா தெரிய பப்புக்கு பேய் வைன் ஆடிப்பாங்க ஆதனாலத்தான் நீங்க சின்ன பொண்னா தெரியரீங்கன்னு சொன்னேன்" நடந்ததை கூறினான் மதன். "என்ன ரொம்ப இன்சல்ட் பன்னிட்டிங்க.. " கோபித்தாள். "சரி, நாளைக்கு எல்லாறையும் கூட்டு, அட்மின் ஆன்டியில்ல சின்ன பொன்னுதான் அப்ளிகேக்ஷன் போட்றவங்க போடலாம்னு அனோன்ஸ் பன்னிட்ரேன் போதுமா??" என்றான். "நீங்க சும்மா இருந்தாலே போதும்.. நான் ஆல்ரெடி ரிசர்வ்டு.. கதைக்கு வாங்க" என்றாள்.

"நெனச்சன்டி.. நீ புக்காயிட்ருப்பன்னு.. எந்த பொன்னு இன்னைக்கு 27 வயசு வரைக்கும் ப்ரீயா இருக்கா.. ஆதுவும் உன்னமாதிரி IT ல இருக்குரவளுங்க.. அதனாலத்தான் அனுபவஸ்தன் ஒருத்தன், 'நீ விரும்புற பொண்ன கட்னா அதுக்கு பேரு லவ் மேரேஜ், இன்னொருத்தன் விருப்புன பொண்ன கட்னா அதுக்கு பேரு ஆரேன்ஜ் மேரேஜ்' னு டிவிட்ர்ல டிவீட்ட போட்டான்." மனசாட்சியின் குரல் மதனிற்கு கேட்டது.

மதன்: சரி கதைக்கு வருவோம். இப்படி UNIX வளர்ந்து வந்த நேரத்துல, சாப்ட்வேர் இன்டஸ்ட்ரீல ஒரு தொத்துநோய் பரவுச்சு. அதுவரைக்கும் ஒரு ப்ரோக்ராமர் எழுதின ப்ரோக்ராம விற்கும்பேது அதோட சோர்ஸ்கோடையும் சேர்த்தே கொடுப்பாங்க, 1970 ஸ் என்ட்லயும் 1980 ஸ்லயும் இந்த நிலம மாறிடுச்சு. கம்பனிங்க மத்த கம்பனிங்களுக்கு அவங்க எழுதின ப்ரோக்ராமோட லாஜிக் தெரியக்கூடாதுன்னு ப்ரோக்ராம விற்கும்போது

சோர்ஸ்கோட தர மறுத்தாங்க. அதுவரைக்கும் மேத்தமெடிக்ஸோட தியரம் மாதிரி ஈஸியா கெடச்சிக்கிட்டிருந்த சோர்ஸ்கோடுங்கல கண்ல பார்கரதே குதுரக்கொம்பா மாறிடுச்சு. சாதாரனமா இருந்த சாப்ட்வேர் ப்ரப்ரைட்டரி சாப்ட்வேரா (proprietary software) மாருச்சு. இதனால ஒரு யூசர் அவன் காசுகொடுத்து வாங்ன ப்ரோக்ராம்ல ப்ரச்சன இருந்துச்சுன்னா அத அவனாலேயே சரிபன்னிக்க முடியல, மறுபடியும் வாங்ன கம்பனிகிட்ட ஓடவேண்டி இருந்தது. அந்த கம்பேனி அந்த யூசரோட ப்ரச்சனைய சரிபன்ன சர்விஸ் ச்சார்ஜா மறுபடியும் காச கரந்தானுங்க.

காா்த்திகா: ஆவுங்க எழுதின ப்ரோக்ராம்ல இருக்குற பக்க(bug) க்லியர் பன்ன யூசர் இன்வஸ்ட் பன்னனுமா.. நல்ல கதையா இருக்கே??

மதன்: அப்படி நொந்து போனவங்கள்ல ஒருத்தர்தான் Stallman, இவரு MIT ல ஒர்க்பன்னும்போது அங்கிருந்த ஒரு ப்ரின்டர் படுத்துருச்சு. அத நானே சரிபன்னிக்குறேன் எனக்கு அந்த ப்ரின்டரோட ப்பர்ம்வேர் சோர்ஸ்கோட கொடுங்கன்னு அந்த ப்ரின்டர் கம்பனிகிட்ட கேட்டார், அதுக்கு அந்த கம்பனி "போயா லூசு, எந்தகாலத்துல இருக்க, வாங்கும்போது காப்பிரைட் லைசன்ஸ்ஸ பார்த்தியா இல்லியா.. அதுல சோர்ஸ்கோட் கொடுக்கமாட்டோம்னு போட்டிருக்கோம்ல.. அந்த லைசொன்ஸ அஸ்சப்ட் பன்னிட்டுதான ப்ரின்டர வாங்குன.. இப்ப சோர்கோட் கெட்குற?" னு சொல்லி தொரத்திடுச்சு. அன்னைக்கு முடிவு பன்னார், "இருங்கடா.. இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்றேன்.. இன்னைக்கு பாப்புலரா இருக்குற யுனிக்ஸ்மாதிரியே ஒரு ஆப்ரடிங் சிஸ்டத்த எழுதி அத காப்பிலெப்ட் லைசன்ஸா சோர்ஸ்கோடோட கொடுக்கரேன்.." அப்டீன்னு முடிவு பன்னி எழுதவும் ஆறம்பிச்சுட்டார். அவர் எழுத ஆரம்பிச்ச அந்த ஆப்ரட்டிங் சிஸ்டத்துக்கு பேரு GNU/Hurd, அவர் சொன்ன அந்த காப்பிலெப்ட் லைசன்சுக்கு பேரு GPL. இந்த GPL லைசென்ஸ் இருக்குற சாப்ட்வேர்கலோட சோர்ஸ்கோட யார்வேனும்னாலும், பார்க்கலாம், படிக்கலாம், தப்பிருந்தா திருத்தலாம். ஆனா அந்த சாப்ட்வேர்கல காசுக்கு விக்கமட்டும் முடியாது. இந்தமாதிரியான சாப்ட்வேர்கள்தான் ப்ரீ சாப்ட்வேர்ஸ் (free software) இல்லின்னா ஓப்பன் சோர்ஸ் ச்ப்ட்வேர்ஸ்னு (opensource software) கூப்பிட்ராங்க.

கார்த்திகா: opensource னா சேர்ஸ்கோட படிக்கமுடியும்.. இப்பதான் தெளிவா புரியுது.. இவ்வளவு நாளா.. opensource கு அர்த்தம் புரியாம லினக்ஸ் அட்மினா இருந்திருக்கேன்... ஆமா.. GNU ஓக்கே.. GPL ம் கேல்விப்பட்ருக்கேன்.. அதென்ன Hurd?

மதன்: சொல்ரேன்.. அப்படி எழுத ஆரம்பிச்சவரு, அவரு எழுதினத usenet ல இவர மாதிரி இருக்குற ப்ரோக்ராமர்ஸ்கிட்ட ஷேர் பன்னிக்கிட்டாரு. சோர்ஸ்கோட பார்த்தவங்க அதுல இருந்த மிஸ்டேக்சகெல்லாம் பிக்ஸ் பன்ன ஆரம்பிச்சாங்க.. இப்படி இன்ட்ரஸ்ட்டா ஒர்க் பன்னவங்க ஒன்னா சேர்ந்து ஒரு குழுவ ஆரம்பிச்சாங்க. அதுக்குபேரு FSF (free software foundation). ஸ்டால்மன் யூனிக்ஸ்ல இருக்குறமாதிரியே பல கமான்டுகல அவரோட GNU/Hurd க்கு எழுதினாரு, gcc ன்ற ஒரு C கம்பைலர் எழுதினாரு, emacs எழுதினாரு, ஆனா இவரால இவர் யோசிச்சு வச்சிருந்த Hurd kernel ல எழுதமுடியல, ஒரு ஆப்ரெட்டிங் சிஸ்டத்துல கர்னல் இல்லாம எதுவும் இயங்காது, இவரு ஒரு OS க்கு தேவையான எல்லாத்தையும் எழுதிட்டாரு கர்னல தவிர.

கார்த்திகா: அப்ப அவரோட கனவு என்னாச்சு?

மதன்: அவரோட கனவு 1992 ல நிஜமாச்சு. ப்பின்லான்ட்ல (finland) ஹெல்சிங்கி யூனிவர்சிட்டில படிச்சிட்ருந்த லினஸ் டார்வெல்ஸ் (linus torvalds) ன்ற ரிசர்ச் ஸ்டூடென்ட், தன்னேட குரு Andrew Tanenbaum கிட்ட இருக்குற யுனிக்ஸ் கர்னல போல இருக்குர மின்க்ஸ் (minix) கர்னல மாதிரியே தானும் ஒரு கர்னல உருவாக்க நினைச்சார், ஆனா அவர் மினிக்ஸ் மாதிரி மைக்ரோ கர்னலா இல்லாம ஒரிஜ்னல் யுனிக்ஸ் மாதிரியே ஒரு மோனலதிக் கர்னல உருவாக்குனார். அதுக்கு லினஸ், ஸ்டால்மன் எழுதிய gcc கம்பைலர யூஸ்பன்னார். அதுமட்டுமில்லாம ஸ்டால்மனோட பல ஒப்பன் சோர்ஸ் ப்ரோக்ராம்கல யூஸ் பன்னார். தன்னோட கர்னலும் ஸ்டால்மனோட ப்ரோக்ராம்கல போல எல்லாரும் பயன்படுத்தனும், தவறு இருந்தா திருத்தனும்னு ஸ்டால்மன மாதிரியே அவரோட கர்னல GPL லைச்ன்ஸ்ல வெளியிட்டார். உலகத்துல இருக்குற பல ப்ரோக்ராமர்களும் அவர் கர்னல்ல வெர்க் பண்ன ஆரம்பிச்சாங்க, அந்த கர்னலுக்கு லினக்ஸ் கர்னல்னு (linux kernel) பேரும் வச்சாங்க.

லினஸோட linux கர்னல மட்டுமே வச்சு ஒன்னும் பன்ன முடியாது, அதேபோல ஸ்டால்மனோட GNU ப்ரோக்ராம்கள் கர்னல் இல்லன்னா வொர்க்பன்னாது, இந்த GNU வையும் Linux ஐயும் சிலபேர் எடுத்துக்கிட்டு தன்னோட தேவைக்கு ஏத்தாமாதிரி தன்னோட ஆப்ரட்டிங் சிஸ்டம் இருக்கனும்னு நினச்சு வடிவமைக்க தெடங்குனாங்க. அவங்க வடிவமைச்சத டிஸ்ட்ரோ (distro) அப்படீன்னு ஒரு முழு GNU/Linux ஆப்ரெட்டிங் சிஸ்டமா உருவாக்கி ப்ரீயா கொடுத்தாங்க (ஏன்னா, GNU/Linux ல இருக்குற எல்லா சாப்ட்வேர்களும் ஸ்டால்மனோட GPL லைசென்ஸோட வர சாப்ட்வேர்ஸ். அதுங்கல விக்கமுடியாது, ஆதனால GNU/Linux ஐயும் விக்கமுடியாது). காலப்போக்குல GNU/Linux ச வெரும் லினக்ஸ்னே கூப்ட ஆரம்பிச்சாங்க.

கார்த்திகா: ச்சான்சேயில்ல.. லினக்ஸ் பின்னாடி இப்டியொரு கதையா?? நான் ஒரு லினக்ஸ் அட்மின்னு சொல்லவே கேவலமா இருக்கு.

மதன்: இப்பத்தான் லினக்ஸ் பத்தி தெரிஞ்சிக்கிட்டீங்கள்ல இனி கவலப்படாதிங்க.. இன்னைக்கு உலகத்துல லினக்ஸ் இல்லாத இடமே இல்ல.. செல்போன்லிருந்து சூப்பர்கம்யூட்டர் வரைக்கும் லினக்ஸ்தான், உங்க கையிலிருக்குற ஆன்றாய்டுல இருந்து நாசா மார்ஸ்சுக்கு அனுப்புன ரோவர் வரைக்கும் லினக்ஸ்தான். ஆனா இதப்பத்தி யாருக்குமே தெரியாது, ஏன், நம்ம IT ப்பீல்ட்லயே முக்காவாசி பேரு லினக்ஸ், விண்டோஸ்மாதிரி வெரும் OS தான்னு நினைச்சிகிட்டு இருக்காங்க. ஆது வெரும் OS இல்லிங்க, லினக்ஸ் ஒரு சரித்திரம், ஒப்பன் சோர்ஸ் புரட்சிக்கு சாட்சியா கம்பீரமா நிக்குர ஒரு சின்னம்.

கார்த்திகா: வசனம்லாம் செமயா வருது..

மதன்: இன்னும் சொல்லிகிட்டே போகலாம்.. ஆன்றாய்டும் ஐஓயஸ்சும் உருவான கதை, விண்டோஸ் லினக்ஸ் வார், ஆரம்பிச்சா விடிஞ்சிடும்.. இப்ப டைம் 00:05 IST, இன்னும் வீட்டுக்கு போகலயா??

கார்த்திகா: என்னது? நைட்டு பன்னன்டா? செத்தேன்.. உங்க ப்ரெண்ட் சொன்னது கரைட்.. நான் ஆப்பவே கௌம்பியிருக்கனும்.. இப்ப புரிஞ்சிக்கிட்டேன் எதுக்காக உங்கல மொக்கன்னு கூப்புட்ராங்கன்னு.. பட் ஆட்ஸ் ஆப் டூ யூ.. நான் ஹிஸ்ட்ரி க்லாஸ்லகூட இப்டி இன்ட்ரஸ்டா கத கேட்டதில்ல.. நீங்க பன்ன இன்சல்டுக்கு அப்பவே ஏன்சு போயிருப்பேன்.. என்னமோ தெரியல நீங்க எக்ஸ்ப்லெயின் பன்ன வே என்ன உட்காரவச்சிருச்சு..

மதன்: அப்ப இதுதான் லாஸ்ட்டா? shell scripting பத்தி?

கார்த்திகா: பார்ப்போம்.. எனிவே.. எ பிக் தேங்ஸ்..

மதன்: இட்ஸ் ஓகே.. ஆமா.. எப்படி போவீங்க.. என் பைக் எடுத்துட்டு போரீங்களா?

கார்த்திகா: என்ன பாத்தா உங்களுக்கு காமிடி பீஸ் மாதிரி இருக்கா??

மதன்: இல்லங்க.. உங்க பர்ஸ்னால்டி அப்பியரன்ஸ் வச்சு பாக்கும்போது ஆர்லி டேவிசன் ஓட்டி இருப்பீங்களோன்னு ஒரு கொஸ்தான்..

கார்த்திகா: சிரிச்சிட்டேன்.. போதுமா.. வெளிய போனா.. ஆட்டோ இருக்கு.. அப்டி இல்லன்னா.. என் ப்ரெண்டுக்கு கால் பண்னி அவல ஸ்கூட்டி எட்த்துட்டு வர சொல்லிடுவேன்.

மதன்: ஹாஸ்டலுக்கு பேனப்புறம் ஒரு மெசேஜ் அனுப்புங்க.. எப்படியோ நீங்க லேட்டா போறதுக்கு நான் காரணம் ஆயிட்டேன், நீங்க பத்ரமா போயிட்டிங்கனு தெரிஞ்சிக்கிட்டா எந்த டென்ஷனும் இருக்காது பாருங்க.. அதான்..

கார்த்திகா: அது ஹாஸ்டல் இல்ல அப்பார்ட்மெண்ட்.. நானும் என் ப்ரண்டும் தங்கியிருக்கோம். என்னபத்தி நீங்க

கவலபட வேனாம். நீங்க பத்ரமா வீட்டுக்கு போங்க.. நடு ராத்திரில மோகினி பிசாசுங்க அதிகமா சுத்துமாம்.. பசங்கல பாத்தா விடாதுங்களாம்..

மதன்: ஜோக்கு.. நானும் சிரிச்சிட்டேன்... ;)

கார்த்திகா: ஓகே.. பாய்..

மதன்: சீயு பாய்..

"அந்த பொண்னு அவளுக்கு எற்கனவே பாய்ப்ரெண்ட் இருக்கான்னு சோல்லிட்டு போரா.. எப்பர்ரா உன்னால சாதாரணமா இருக்க முடியுது" கொட்ட ஆரம்பித்தது மனசாட்சி. "அவளுக்கு ஆள் இருந்தா என்ன.. இல்லாட்டி என்ன.. நான் ரெம்பநாளா யார்கிட்டயாவது சொல்லனும்னு இருந்த விஷயத்த இன்னைக்குதான் முழுசா சொல்லியிருக்கேன்.. அது போதும்டா எனக்கு.. டுபுக்கு.." என்று சந்தோஷத்துடன் கூறினான் மதன்.

தொடரும்...

Keeran N <n.keeran@yahoo.in>

# ஓபன் சோர்ஸ் தொடர்பான பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள்

ஓபன் சோர்ஸ் தொடர்பான பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் பற்றிய விவரங்களை சேகரித்து வருகிறோம். உங்களுக்கு தெரிந்த தகவல்களை விக்கியில் பகிரவும்.

http://wiki.ilugc.in/index.php?title=Foss_based_solutions_providing_Organizations

| நிறுவனம் | சேவை | ஊர் | முகவரி | வலைத்தளம் |
|---|---|---|---|---|
| **IgniteMindZ** | Training, IT services and Products in Perl, Python, Advaned Linux Shell Scripting, JBoss with clustering, Ruby on Rails, Android, Embedded Systems, Linux Administration, | Chennai | No 2/8, 2nd floor Saradambal St, T.Nagar, Chennai 600017. Phone: 9092774587 | www.ignitemindz.com |
| **CollabNet** | Support for Subversion | Chennai | The Lords, Block II,5th Floor #1,2,North Extension Area,Ekkatuthangal, Guindy,Chennai-600032, India,Phone: +91 44 4220-3700,Fax: +91 44 4220-3900, | www.collab.net |
| **LinuXpert Systems** | All Popular GNU/Linux Distributions with complete repository, Linux Administration Training, FOSS Lab Setup, LTSP based Thinclient, DSpace based Digital Repository, BigBlueButton based Web Conferencing | Chennai | Mr.S. Baskar, New No.1, Vembuliamman Koil St, Pazhavanthangal, Chennai -- 600 114. Phone: 98841-65649, baskar@linuxpert.in | www.linuxpert.in |
| **HexSource Technologies** | We are providing Training and Services in Linux Device Driver, GCC, Python, Arduino, Embedded Systems, Shell Scripting, Zen Cart, PhpBB, SVN, Git, Tcl, Wordpress | Chennai | No 31/7, 1st floor Duraisamy Road, T.Nagar, Chennai 600017. Phone: 08525085655/044 43066505 | www.hexsource.com |
| **opennovus** | moodle,fedena,italc and all open source lms customization and training | chennai | #3,ramamoorthy avenue , sakthi Nagar,porur ,chennai India, Phone:04443806139 | www.opennovus.in |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Got Love?** - **Marry for Love** | We do all our development using FoSS & helping village schools with FoSS | Chennai | ECR, Vennangupattu, Kottaikadu P.O, Cheyyur Tk, Kanchi Dt, TN, India, Phone:044-27506020 | www.gotlove.in | |
| **Blue Light** | Non-profit providing Linux/FOSS support and consulting to Auroville community | Auroville, Pondicherry | Saracon, Auroville, TN, India, Phone:0413-2622500 | http://bluelightav.org facebook | |
| **Magendhiran Consultancy Services** | GIS & Remote Sensing | Kanchipuram | 05, #rd Street, Gandhi Nagar, Kanchipuram - 631501, India, Phone: +919047134181 | www.mcsmapping.com | |
| **RedSupport Services Pvt LTD** | Installation,Training In Linux For New Users,Implementation Of Ippbx,Call Center,Firewall,Crm And More From Open Source Commerically With Support | Coimbatore, Chennai,Trichy,Salem,Cochin And Pondicerry | N.MAHESH Kumar ,#3.B.K.R Nagar,Opp K.P.N Parcel Service,Sathy Road,Gandhipuram,Coimbatore-641012,Phone-9244432444 | WWW.REDSUPPORT.IN | |
| **Restart Technologies** | Training on Linux Administration, Support for Linux Servers | Ooty | Mr. Raghavendra, 1st floor, UMC market building, ootacamund - 643 001, restarttechnologies@gmail.com, 98434 59995 | | |
| **Career Gear** | Industry Driven Talent Factory; Super affordable cloud computing training and guaranteed placement at emerging Indian cloud based businesses | Trichy | 75K/1, B2, 2nd Floor, Shifana Complex, Salai Road, Thillai Nagar, Trichy - 620018, mail AT careergear DOT com, 96299 21512 | www.careergear.in | |
| **Initcron** | Design, Implementation, Automation, Monitoring and Support for Libre/Open Source Technologies including but not limited to Cloud Computing, DevOps, Big Data : Hadoop/Hbase/Pig/Zookeeper/Hive/Oozie, Chef/Puppet Configuration Management, | Chennai/Pune | 206, Sai Niketan, 6/12 Lock St. Kottur Gardens, Chennai. Ph: 9962232328 | http://www.initcron.com, http://www.initcron.org | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Git/SVN, AWS tools: ec2/s3/AutoScaling/CloudFormation/CloudFront/Route53/RDS/VPC/ElastiCache/Beantalk, Virtualization and Private Cloud: OpenVZ/Xen/Eucalyptus/OpenStack/OpenQRM, DBs: MySQL/PostgreSQL/MongoDB/Cassandra/NoSQL, Monitoring: Nagios/Zenoss/Zabbix/Groundwork, Network: Pfsense/OpenVPN Web: LAMP,RoR,Joomla,Drupal,Wordpress,Web2py,Turbogears,Pylons,Django,PHPMotion,Magento etc. | | | |
| **Samgha IT Services Private Limited** | Develop Cross Platform Mobile Application and Specialize in Android Platform. Works in Open Source CMS, which includes Wordpress and Joomla. Also Provides advanced Ruby On Rails and J2EE Solutions. | Chennai | 1/601, Mugappair west (Near D.R.Furnitures), Chennai-600037, reachus AT samgha DOT com, 9790902787 | www.samgha.org |
| **GVSolutions Pvt Ltd** | Supporting Opensource products and Linux servers | Chennai | 28-B,AnnaiVelankanniNagar,Phase-II,Mugalivakkam ,Chennai-600116 | |
| **P.V.S.Giridhar & Sai Advocates Legal & Allied Services** **lawgonindia.com** | legal assistance to the open source community in compliance and infringement and related issues | Chennai | No.319(Old No.155), Linghi Chetty Street (III Floor), George Town, Chennai 600 001.<br><br>Phone: 91-44- 2524 3949/ 4216 3949 ‖ Email: giridhar@lawgonindia.com / sai@lawgonindia.com | |
| **Chrisranjana** | Php, Mysql Programming. Payment gateways api. Opencart, Moodle, Drupal Customizations. | Chennai | 32/94 Velachery Road, Guindy. Phone: 65636224 | |

# கணியம் வெளியீட்டு விவரம்

பதிப்புரிமம் © 2012 கணியம்.

கணியத்தில் வெளியிடப்படும் கட்டுரைகள் http://creativecommons.org/licenses/by-sa/3.0/ பக்கத்தில் உள்ள கிரியேடிவ் காமன்ஸ் நெறிகளையொத்து வழங்கப்படுகின்றன.

இதன்படி,

கணியத்தில் வெளிவரும் கட்டுரைகளை **கணியத்திற்கும் படைத்த எழுத்தாளருக்கும்** உரிய சான்றளித்து, நகலெடுக்க, விநியோகிக்க, பறைசாற்ற, ஏற்றபடி அமைத்துக் கொள்ள, தொழில் நோக்கில் பயன்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது. கிரியேடிவ் காமன்ஸ் ஒத்த நெறிகளில் வெளியிட வேண்டும்.

**ஆசிரியர்**: த. ஸ்ரீநிவாஸன் - editor@kaniyam.com 98417 95468

**வெளியீட்டாளர்:** த. ஸ்ரீநிவாஸன், தரை தளம் 4, சுபிக்ஷா அடுக்ககம், 42, வியாசர் தெரு, கிழக்கு தாம்பரம் சென்னை - 600 059
தொ. பே: +91 98417 95468 – tshrinivasan@gmail.com

**இதழ் ஆக்க மென்பொருட்கள்:**

LibreOffice Writer 4.0.3.3 | Arch Linux | Gimp 2.8

இதுவரை வெளியான கணியம் இதழ்கள் : http://www.kaniyam.com/all-releases/

பதிவிறக்கி பகிருங்கள்.**கணியம்** இதழின் மூல ஆவணங்கள் அனைத்தும் http://dev.kaniyam.com/projects/kaniyam/files ல் சேமிக்கப்படுகின்றன. அவற்றை பயன்படுத்தி, இதழின் கட்டுரைகளை நீங்கள் மறு பிரசுரம் செய்து கொள்ளலாம்.

நீங்களும் மொழிபெயர்க்கலாமே

http://dev.kaniyam.com/projects/kaniyam/wiki/Translation_Recommendations

மேற்கண்ட சுட்டியில் காணும் கட்டுரைகளை மொழிபெயர்க்கலாமே!

# கணியம் பற்றி...

## இலக்குகள்

- கட்டற்ற கணிநுட்பத்தின் எளிய விஷயங்கள் தொடங்கி அதிநுட்பமான அம்சங்கள் வரை அறிந்திட விழையும் எவருக்கும் தேவையான தகவல்களை தொடர்ச்சியாகத் தரும் தளமாய் உருபெறுவது.
- உரை, ஒலி, ஒளி என பல்லூடக வகைகளிலும் விவரங்களை தருவது.
- இத்துறையின் நிகழ்வுகளை எடுத்துரைப்பது.
- எவரும் பங்களிக்க ஏதுவாய் யாவருக்குமான நெறியில் விவரங்களை வழங்குவது.
- அச்சு வடிவிலும், புத்தகங்களாகவும், வட்டுக்களாகவும் விவரங்களை வெளியிடுவது.

## பங்களிக்க

- விருப்பமுள்ள எவரும் பங்களிக்கலாம்.
- கட்டற்ற கணிநுட்பம் சார்ந்த விஷயமாக இருத்தல் வேண்டும்.
- பகிர்வதை கட்டுப்படுத்தாத வண்ணம் படைப்புகள் இருத்தல் அவசியம். உதாரணத்திற்கு காபிலெப்ட் & கிரியேடிவ் காமன்ஸ்.
- தாங்கள் பங்களிக்க விரும்பும் ஒரு பகுதியில் வேறொருவர் ஏற்கனவே பங்களித்து வருகிறார் எனின் அவருடன் இணைந்து பணியாற்ற முனையவும்.
- கட்டுரைகள் மொழிபெயர்ப்புகளாகவும், விஷயமறிந்த ஒருவர் சொல்லக் கேட்டு கற்று இயற்றப்பட்டவையாகவும் இருக்கலாம்.
- படைப்புகள் தொடர்களாகவும் இருக்கலாம்.
- தொழில் நுட்பம், கொள்கை விளக்கம், பிரச்சாரம், கதை, கேலிச்சித்திரம், நையாண்டி எனப் பலசுவைகளிலும் இத்துறைக்கு பொருந்தும்படியான ஆக்கங்களாக இருக்கலாம்.
- தங்களுக்கு இயல்பான எந்தவொரு நடையிலும் எழுதலாம்.

- தங்களது படைப்புகளை எளியதொரு உரை ஆவணமாக editor@kaniyam.com முகவரிக்குஅனுப்பிவைக்கவும்.
- தள பராமரிப்பு, ஆதரவளித்தல் உள்ளிட்ட ஏனைய விதங்களிலும் பங்களிக்கலாம்.
- ஐயங்களிருப்பின் editor@kaniyam.com மடலியற்றவும்.

### விண்ணப்பங்கள்

- கணித் தொழில்நுட்பத்தை அறிய விழையும் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் இது.
- இதில பங்களிக்க தாங்கள் அதிநுட்ப ஆற்றல் வாய்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.
- தங்களுக்கு தெரிந்த விஷயத்தை இயன்ற எளிய முறையில் எடுத்துரைக்க ஆர்வம் இருந்தால் போதும்.
- இதன் வளர்ச்சி நம் ஒவ்வொருவரின் கையிலுமே உள்ளது. குறைகளிலிருப்பின் முறையாக தெரியப்படுத்தி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கவும்.

# துறை சார் - இடம் சார் பொறுப்பாளர்கள் - மாணவ மன்றங்கள்

- தமிழகந்தோறும் கட்டற்ற மென்மம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணிகளை வெளிக்கொணர வேண்டி முதற்கட்டமாக மாவட்டந்தோறும் கணியத்திற்கு தன்னார்வலப் பொறுப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள்.
- கணியம் மாணவ மன்றம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- கணியத்திற்கு துறை சார்ந்த நுண்ணிய படைப்புக்களை கொண்டு வரக்கூடிய துறைப் பொறுப்பாளர்களும் தேவைப்படுகிறார்கள். தாங்கள் கட்டற்ற கணிநுட்பம் சார்ந்த் ஓர் துறையில் நிபுணராக இருந்தால் அத்த்துறை தொடர்பான செய்திகளை கணியத்திற்கு படைத்துத் தருவதில் பொறுப்பு வகிக்கலாம். உதாரணத்திற்கு லினக்ஸ் கரு உருவாக்கம், டெபியன் இயக்குதளம்.
- தமிழகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே வேலை - கணியத்திற்கு பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தேசங்களிலிருந்தும் முக்கியச் செய்திகளை தமிழில் வடித்துத் தர ஆர்வமிருப்போரும் வேண்டும்.
- விருப்பமுடையோர் உங்களைப்பற்றிய விவரங்களுடன் nirvagi@kaniyam.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.